1772

இந்திய சரித்திரக் காதை

(இரண்டாம் புத்தகம்)

C. S. ரங்கஸ்வாமி, பி. ஏ., எல். டி.
இயற்றியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAR 1940
MADRAS
3708
3793.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[2-5-'39 கெஜட், 116-ஆம் பக்கம் பார்க்க]

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1939

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 7 அணா

இந்திய சரித்திரக் காதை

(இரண்டாம் புத்தகம்)

C. S. ரங்கஸ்வாமி, பி. ஏ., எல். டி.

இயற்றியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAR 1940
MADRAS

954

3708

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

(2-5-39 கெஜட் 116-ஆம் பக்கம் பார்க்க)

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1939

[ரெஜிஸ்தர் செய்தது]

[விலை 7 அணா

Printed at
The 'Caxton Press,'
Madras.

முகவுரை

இவ்விரண்டாவது புத்தகமும் நமது ஆரம்பப் பாட சாலைகளின் உபயோகத்துக்காக எழுதப்பட்டது. நமது நாட்டுக் கதைகள் இன்னும் சில அடங்கியது.

இதிலும் ஒவ்வொரு பாடத்திலும் ஒன்று அல்லது இரண்டு முக்கிய விஷயங்களையே சொல்லி யிருக்கிறது. சம்பவங்கள் நடந்த இடங்களைக் காட்டப் படங்களும் உண்டு. முன்போல அவற்றில் ஒவ்வொன்றும் இந்தியாவின் எந்தப் பாகத்தைக் காட்டுகின்றது அல்லது இந்தியாவுக்கு எந்தப் பக்கத்திலுள்ள நாட்டைக் குறிக்கின்றது என்று தெரிந்து கொள்ளவேண்டும். பாடத்தோடு பாடத்தைச் சம்பந்தப்படுத்தும் குறிப்புகளையும் கவனிக்க வேண்டும்.

ஒரு பாடத்தை நடத்த: படத்தைக் காட்டிப் பாடத்திலுள்ள விஷயம் எங்கு நடந்ததென்று தெரிவிக்க; பிறகு பாடவிஷயத்தை வாய்முறையாய்ப் பிள்ளைகளுக்குச் சொல்லுக; கேள்விகளுக் கேற்ற பதில் தருவிக்க; கடைசியாய்ப் பாடத்தை ஒருதரம் வாசிக்கச் செய்க.

இவ்விரு புத்தகங்களும் ஆரம்பக் கல்வி பெறும் நமது மக்களுக்கு இந்திய சரித்திரத்தில் உள்ள முக்கிய சம்பவங்கள் பலவற்றை நன்கு புலப்படச் செய்யுமென நம்புகின்றேன்.

C. S. R.

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	நமது நாடு	5
2.	மோஹறன்-ஜ-டாரோவில் ஒரு வீடு	9
3.	பத்து அரசர்களின் சண்டை	13
4.	சீதை	16
5.	பீஷ்மர்	21
6.	வர்த்தமான மகாவீரர்	25
7.	கௌதம புத்தர்	27
8.	சந்திரகுப்த மௌரியர்	31
9.	அசோக சக்கரவர்த்தி	35
10.	சேரன் செங்குட்டுவன்	39
11.	குதிரை யாகம்	44
12.	பிரயாகையில் ஒரு பெரும் கொடையாளி	48
13.	மஹேந்திரவர்மனும் புளகேசியும்	51
14.	முகம்மது நபி நாயகம்	55
15.	ராஜ ராஜ ஈசுவரம்	59
16.	சோமநாதபுரம் கோவில்	63
17.	ஸ்ரீரங்கம் கொள்ளை	67
18.	வித்தியா நகரம்	70
19.	ராணா சாங்கா	74
20.	அக்பரும் பைராம்கானும்	78
21.	சன்ட் சுல்த்தானா	82
22.	சிவாஜியும் அப்சுல்கானும்	86
23.	ஒரு புதிய சமுத்திர மார்க்கம்	91
24.	போட்டி	95
25.	ராஜா ராம் மோஹனராய்	100
26.	திப்பு சுல்த்தானும் சங்கராச்சாரியரும்	104
27.	சாம்ராஜ்யம்	108

இந்திய சரித்திரக் காதை

(இரண்டாம் புத்தகம்)

1. நமது நாடு

நமது தேசப் படத்தைப் பார்க்க. அதன் தென்பாகம் முக்கோண வடிவமானது. வட பாகம் நான்கு மூலைகளுடையது.

முக்கோண வடிவமான தென்னிந்தியாவின் கிழக்குப்பாகத்திலுள்ளது வங்காளக்குடா. மேற்கிலுள்ளது அரபிக்கடல். இவை இரண்டும் இந்தியாவுக்குத் தெற்கிலுள்ள இந்துமகா சமுத்திரமென்னும் பெரிய நீர்நிலையின் பாகங்களாம். அவற்றில் அயல்நாடுகளுக்குப் போகவும் வரவும் உதவும் கப்பல்கள் செல்கின்றன. ஆதலால் ஆழமான நீர்நிலைகளாய் இருந்தாலும் அவைகளால் போக்குவரத்துக்குத் தடை இல்லை.

வடஇந்தியா ஏறக்குறைய ஒரு நாற்கோணமாகும். அதன் வடக்கே இருப்பது இமயமலைத் தொடர். உலகத்தில் உள்ள மலைகளுக்குள் அது மிக்க உயரமானது. ஒரு மனிதன் உயரம் ஆறு


இந்தியா
சிந்து நதி
ஜீலம்
ரவி
ஸட்லெஜ்
டில்லி
யமுனா
கங்கை
கோக்ரா
பிரம்மபுத்திரா நதி
சிந்து நதி
கராச்சி
சம்பல்
சோன்
கங்கைநதி
நர்மதை
கல்கத்தா
பம்பாய்
கோதாவரி
கிருஷ்ணை
மதராஸ்
காவிரி
சிம்மளம்
1000 அடிக்கு மேல் உயரம்
1000 அடிவரையில் ,,

அடி என்றால் இத்தொடரில் மலைகள் 3,500 முதல் 5,000 ஆள் உயரம் இருக்கின்றன. இத்தொடருக்கு மேற்கிலும் கிழக்கிலுமிருந்து தெற்கு முகமாய்ப் பிரிந்துபோகும் வேறு மலைகள் இருக்கின்றன. அவைகளும் பெரிய மலைகள்தான். ஆனால் இமயமலையைவிட மிகச் சிறியவை.

இம்மலைகள் நமது நாட்டைக்காக்கக் கடவுள் இயற்றிய மிகப் பெரிய சுவர்கள்போல் இருக்கின்றன. அம்மாதிரியே கடல்களும் ஆழமான அகழிகள் போன்றன. எனவே இந்தியாவைச் சுவர்களும் அகழிகளும் காக்கும் ஒரு பத்திரமான கோட்டை என்னலாம்.

இந்நாடு மிகப் பெரியது. அதில் சில பாகம் தாழ்ந்த சமதரையாகவும் சில பாகம் சற்று உயர்ந்த பீடபூமியாகவும் வேறு சில குன்றுகளாகவும் மலைகளாகவும் அமைந்திருக்கின்றன. மேலும் இந்நாட்டில் மலைகளிலிருந்தும், பீடபூமிகளிலிருந்தும் பல ஆறுகள் பெருகுகின்றன. அவற்றின் ஜலத்தாலும் பெய்யும் மழையாலும் பல இடங்கள், பல பொருள்கள் விளையும் நல்ல நிலங்களாக இருக்கின்றன. மற்றவை மலை நாடாகவும் சில உலர்ந்த பாலை நிலமாகவும் இருக்கின்றன.

இந்நாட்டில் எங்கும் உஷ்ணமும் குளிரும் ஒரே மாதிரியாக இராது. சித்திரை வைகாசி மாதங்களில் எங்கும் உஷ்ணம் அதிகமாய் இருக்கும்.

மார்கழி, தை மாதங்களில் நாம் வசிக்கும் தென்னிந்தியா குளிர்ந்து இருக்கிறது. இங்கிருந்து வடக்கே போகப் போக அவ்விடங்கள் அம்மாதங்களில் குளிர் அதிகரித்து இருக்கின்றன.

நமது ஊர்களில் ஜனங்கள் பல வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருக்கிருர்கள் அல்லவா? அவர்களுடைய நிறம், உருவம், தேகவலிமை முதலியவை மாறி இருக்கின்றன. அம்மாதிரி இப்பெரிய நாட்டில் வித்தியாசங்கள் பல. பல நாட்டு ஜனங்கள் இத்தேசத்தில் வந்து வசிக்கிருர்கள். அவர்கள் பல நிறமுடையவர்கள். பலவேறு குணமுடையவர்கள். பல பாஷைகளைப் பேசுவார். வெவ்வேருன பல தெய்வங்களைத் தொழுவார்.

எனவே, நமது பெரிய தேசமாகிய இந்தியா இயற்கையான பல் அமைப்புகளை உடையது. அதில் சூடும் குளிரும் இடத்துக்கு இடம் மாறும். ஜனங்களும் பல வகுப்பினர். ஆயினும் அவரெல்லாம் பெரிய மலைச்சுவர்களும், கடல், அகழிகளும் சூழ்ந்த இந்நாட்டில் வாழும் இந்தியரே யாவர்.

கேள்விகள்

1. இந்தியாவில் தென்பாகமும், வடபாகமும் எவ்வுரு உடையவை?
2. தென்னிந்தியாவைச் சூழ்ந்துள்ள கடல்கள் எவை?
3. வட இந்தியாவைச் சுற்றியுள்ள மலைகள் எவை?

4. இந்தியாவை எவ்வாறு ஒரு கோட்டைக்கு ஒப்பிடலாம்?

5. இந்தியாவில் பலவகைகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன. என்னென்ன விஷயங்களில் அவ் வேற்றுமைகள் உண்டு?

2. மோஹன் - ஜ - டாரோவில் ஒரு வீடு

இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் சிந்து நாடு இருக்கிறது. அது இப்பொழுது உலர்ந்த பாலைநில முடையது. ஆனால் அங்கு முன்னொரு காலத்தில் சிறந்த பல பட்டணங்களும் கிராமங்களும் இருந்தன. அவை அழிந்து மண்ணால் மூடப்பட்டுப் போயின. சில இடங்களில் அம்மண் மேடுகள் உயரமாய் இருக்கின்றன. அவற்றில் ஒன்று மோஹன் - ஜ - டாரோ. இவ்வார்த்தைக்கு அர்த்தம் 'கிருஷ்ணன் மேடு' என்பதாம்.



சில வருஷங்களுக்குமுன் அம்மேட்டைப் புத்திமான்களான பெரியோர் சிலர் வெட்டிப் பார்த்தனர். வெகு ஆழத்தில் அங்கு அழிந்துபோன

ஒரு பட்டணத்தின் அடையாளம் இருக்கிறது. இப்பொழுது மனிதர் வாசம் அவ்விடத்தில் இல்லை; அப்பட்டணத்தைப் பற்றிக் கவனிப் போம்.

அதில் அகலமான பல வீதிகள் உண்டு. வீதிகளின் இருபக்கங்களிலும் நமது தமிழ்நாட்டு வீடுகள்போல் வீடுகள் இருந்தன. அவற்றில் தெருத்திண்ணையும் பல அறைகளும் தாழ்வாரமும் முற்றமும் இருந்தன.

அவ்வீடுகள் சுட்ட செங்கல்லால் கட்டியவை. அவைகளுக்கு வேண்டிய ஜலம் கொஞ்சதூரத்தி லிருந்து கல்லால் கட்டிய கால்வாய் வழியாய் வரும். கழிவு ஜலம்போகச் சாக்கடையும் இருந்தது.

அவ்வீடுகள் ஒன்றில் ஒரு பையன் இருந் தான். அவன் சுத்தமாய் இருப்பான். அவன் வீடும் தெருவும் சுத்தமானவையே. அவன் இருந்த தெருக்கோடியில் முழுதும் கல்லால் கட்டிய ஒரு திருக் குளம் உண்டு.

அவன் வீட்டிலுள்ளவர்கள் பல நகைகளை அணிவார்கள். பீங்கான்மணி கண்ணாடிமணி கோர்த்த சரடு, மாலை முதலியவற்றைப் பெண்மணி கள் அணிவார்கள். வர்ணம் பூசிய மண் பாத்திரங் களையும், பித்தளைப் பாத்திரங்களையும் வீட்டுக் காரி யங்களுக்கு உபயோகிப்பார்கள். அவர்கள் கத்தி,

கோடரி முதலான கருவிகளைப் பித்தளையில் செய்தனர்.

குழந்தைகள் விளையாடுவதற்கும் பூசை முதலியன செய்வதற்கும் அவர்கள் சுட்டமண், பித்தளை முதலியவற்ருல் சில முத்திரைகள் செய்துகொள்வார்கள். அவற்றில் எருது, மான், யானை, சூலம் முதலிய சித்திரங்கள் பதித்திருக்கும். அவர்கள் பசுக்களையும் எருதுகளையும் (காமதேனு, நந்தி) பூசிப்பார்கள் போலும்.

அப்பட்டணம் பெரியது. பல ஊர்களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும் வியாபாரிகள் அங்கு வருவார்கள். தங்கள் நாட்டுச் சாமான்களை விற்று அங்குக் கிடைக்கும் அரிய பொருள்களை வாங்கிச் செல்வார்கள்.

நமது பையன் பணக்காரன். அவன் தகப்பனர் அவனை அழைத்துக்கொண்டு அயலூர்களுக்குப் போவதுண்டு. அவர்கள் ரதம் போன்ற கனமான வண்டிகளில் செல்லுவார்கள். இரண்டு, நாலு, ஆறு ரிஷபங்கள் அவற்றை இழுக்கும்.

இந்தப் பையன் இருந்த பட்டணம் ஒருநாள் நெருப்புக்கு இரையாயிற்று. வீடுகளின் மேற்கூரை எல்லாம் எரிந்து வீடுகளுக்குள் விழுந்து விட்டன. ஜனங்கள், வேறிடத்தில் வீடுகட்டிக் கொண்டு போய்விட்டனர். நாளடைவில் அவ்

விடம் மேடிட்டுப் பழைய பட்டணத்தின் அடையாளமில்லா திருந்தது.

அப்பொழுது அங்கு ஜனங்கள் மறுபடி வீடு முதலிய கட்டிக்கொண்டு வேறொரு பட்டணம் ஏற்பாடு செய்தனர். இப்படி ஆறுயிர வருஷத்தில் ஒன்றின்மேல் ஒன்றாய் ஆறு ஏழு பட்டணங்கள் அங்கு கட்டப்பட்டன. இது ஆச்சரியமல்லவா?

நமது பையன் இப்பொழுது உயிருடன் இருந்தால் அவனுக்கு ஆறாயிரம் வயது இருக்கும்.

கேள்விகள்

1. மோஹன்-ஜ-டாரோ எங்கு இருக்கிறது? அவ்வார்த்தைக்கு என்ன அர்த்தம்?

2. அம்மேட்டில் என்ன இருந்தது? அவ்வூரைப்பற்றி உனக்குத் தெரிந்ததைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் எழுதுக :— வீதிகள் ; வீடு ; ஆபரணம் ; சீல் முத்திரைகள் ; வியாபாரம் ; பிரயாணம்.

3. அப்பட்டணம் கடைசியாய் என்னவாயிற்று?

4. மறுபடி ஜனங்கள் அங்கு எவ்வாறு வீடு கட்டலாயினர். அம்மேட்டுக்குள் எவ்வளவு பட்டணங்கள் இருந்தன?

5. முதல் பட்டணம் ஏற்பட்டு எவ்வளவு காலமாயிற்று?

3. பத்து அரசர்களின் சண்டை

இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் சிந்து நதியும் அதன் உபநதிகளான ஜீலம், சீனுப், ரவி, பீயஸ், ஸட்லெஜ் என்பவையும் பாய்கின்றன.



அந்நாட்டுக்கு இப்பொழுது பஞ்சாப் (ஐந்து ஜலங்கள்) எனப் பெயர். இங்கு ஐயாயிர வருஷங்களுக்குமுன் ஆரியர் எனப் பெயர்பெற்ற மனித வகுப்பினர் குடியேறி வசித்து வந்தனர். அவர்களுடைய நிறம் வெளுப்பு. உடம்பு திடமானது. இந்திரன் முதலிய தெய்வங்களை அவர்கள் வணங்குவார். ஸோமம் என்னும் கொடியின் சாற்றையும் குதிரை எருது ஆட்டுக்கிடா முதலிய மிருகங்களின் உள்ளே இருக்கும் வபை என்னும் மாமிச பாகத்தையும் அவர்கள் அக்கினியில் ஆகுதி செய்வார். அப்பொழுது கடவுள் வாக்கு என அவர்கள் நம்பி பல வேத மந்திரங்களை உச்சரிப்பார். பெரியோரான ரிஷிகள் அவர்களுக்கு மந்திரிகளும் ஆசாரியரும் ஆவர்.

அந்நாட்டில் தாஸர் என்ற மற்றொரு வகுப்பினரும் இருந்து வந்தார்கள். அவர்கள் நிறம் கறுப்பு. அவர்கள் ஆரியர் தொழுத கடவுளைத்

தொழுவதில்லை. ஆகையால் அவ்விருவருக்கும் அடிக்கடி சண்டை நடக்கும்.

ஆனால் காலம் ஆக ஆக இச்சண்டைகள் பெரும்பாலும் ஒழிந்தன. ஆரிய அரசர் தாச அரசருடன் ஒற்றுமையாய் இருப்பார். இருவகுப்பு அரசர்களும் ஒன்றுசேர்ந்து தங்களுக்கு விரோதிகளான வேறு அரசர்களுடன் சண்டையும் செய்வார்கள்.

அக்காலத்தில் அம்மாதிரி ஒரு பெரிய சண்டை நடந்தது. ஸட்லெஜ் நதிக்குக் கிழக்கில் பரதர் என்றொரு ஆரிய வகுப்பினர் இருந்தனர். அவர்களுடைய ரிஷி விசுவாமித்திரர். அவர்களுடைய அரசன் ரவி ஆற்றுக்கு மேற்கிலுள்ள நாட்டின் அரசனான ஸுதாஸனுடன் யுத்தத்துக்குச் சென்றான். அவனுடன் பத்து ஆரிய அரசரும் தாஸ அரசரும் துணையாகச் சென்றனர். அவர்கள் அங்கு செல்ல இரண்டு ஆறுகளைத் தாண்டிச் செல்லவேண்டி யிருந்தது.

ஸுதாஸ அரசனும் தனது சைனியத்தைத் தயார் செய்தான். அவன் மந்திரி வசிஷ்ட ரிஷி. அவர் இந்திரவிழா இயற்றி ஸோம ரஸத்தைத் தமது யுத்த வீரர்களுக்கு விசேஷமாகத் தந்தார். ஸுதாஸ அரசன் தங்கக் கவசம் அணிந்து தன்னை எதிர்த்து வந்த பத்து அரசர்களுடன் சண்டை செய்தான். அவனுடைய வீரர்கள் கோடரிகளையும் கத்திகளையும், வில், அம்புகளையும்

தரித்து அவனுடன் சென்றனர். வசிஷ்டர் அவர்களுக்குமுன் சென்று இந்திரனை வாழ்த்தினர்.

பரதருடைய அரசனும் அவனைச் சார்ந்த மற்ற அரசர்களும் சண்டையில் தோற்றனர். ஸுதாஸின் சைனியம் அவர்களைத் துரத்த, தமது பொருள்களை எல்லாம் போட்டுவிட்டு அவர்கள் ரவி நதியைத் தாண்டி ஓடினர். அநேகர் அதன் வெள்ளத்தில் உயிர் துறந்தனர். ஸுதாஸ அரசன் வெற்றியும் கீர்த்தியும் பெற்றான்.

அதனால் அவன் பல யாகங்களைச் செய்தான். தனது குருவான வஸிஷ்டருக்கு விசேஷமான வெகுமதிகளைத் தந்தான்.

கேள்விகள்

1. பஞ்சாப் என்று எந்த நாட்டுக்குப் பெயர்?
2. அங்கு முற்காலத்தில் குடியேறிய ஜனங்கள் யார்?
3. அவர்களுடைய தெய்வங்கள் யார்? அவர்கள் கடவுள் பூஜை எப்படிச் செய்வார்?
4. தாஸர் யார்? அவர்களுக்கும் ஆரியருக்கும் சண்டைக்குக் காரணம் என்ன?
5. பத்து அரசர்களின் சண்டையில் இரு கட்சிக்காரர் யார்? அவர்களுடைய ரிஷிகள் யார்? ரிஷி என்றால் என்ன?
6. வெற்றி யாருக்குக் கிடைத்தது? அதை எவ்வாறு கொண்டாடினர்?

4. சீதை

இந்தியாவுக்குத் தெற்கில் இருப்பது சிம்மளத் தீவு. அத்தீவில் பழைய காலத்தில் இலங்கை என்று ஒரு அழகிய பட்டணம் இருந்தது. அங்கு ராவணன் என்னும் அரசன் ஆண்டான். அவன் நல்ல போர்வீரன். பல நாடுகளை எதிர்த்துச்சென்று பல அரசர்களைத் தோற்கடித்தான். அப்பொழுது அவர்களைக் கொன்று அவர்களது நாட்டைக் கொள்ளையடித்து அங்கிருந்து பெண்டிர், குழந்தை முதலியவர்களைத் தன் நாட்டுக்குச் சிறைபிடித்துப் போவான். இலங்கைமாநகர் அவன் ஆண்ட காலத்தில் பல மாளிகைகளும் ஏராளமான பொருள்களும் நிறைந்த பெரிய பட்டணமாய் விளங்கிற்று.

அக்காலத்தில் இந்தியாவில் ஆரியரில் பல பெரியோர் நாடுகளைவிட்டுக் காடுகளில் வசிப்பார். அவர்கள் கடவுளைத் தியானித்தே தமது காலத்தைக் கழிப்பார். அவர்கள்தான் ரிஷிகள். அவர்களைக் கண்டால் கரிய நிறத்தானான ராவணனுக்கு வெறுப்பு. ஆகையால் அவ்வரசனும் அவனுக்கு உட்பட்ட பலரும் அந்த ரிஷிகளை வருத்திக் கொல்வதுண்டு.

ராவணனுக்குக் கோதாவரிக் கரையில் ஜனஸ்தானம் என்று ஒரு நாடு சொந்தமாயிருந்தது. அதில் அவனது தங்கை சூர்ப்பணகை ஆண்டு வந்தாள். ஒருநாள் அவள் கோதாவரிக் கரையில்

ஐந்து ஆலமரங்கள் இருந்த ஒரு சோலைப்பக்கம் சென்றாள். அங்கு புதிதாக ஒரு குடிசை கட்டி இருந்தது. அதில் அழகு பொருந்திய இரண்டு மஹா புருஷர்களும் ஒரு பெண்மணியும் இருக்கக் கண்டாள். அவர்கள் யாரென அவள் விசாரித்தாள். வட இந்தியாவில் அயோத்தி என்னும் நகரத்தின் அரசருடைய குமாரர்கள் எனவும், அப் பெண்மணி அவர்களில் மூத்தவரான ராமனுடைய பத்தினி எனவும் கேட்டாள்.

அவர்கள் மேலும் சொன்னார்கள்: "அயோத்தி அரசன் தசரதன் என்னும் பெரியோன். அவர் தனது ராணிகளில் கைகேயி என்பவளின் பேச்சைக் கேட்டு ராமன் என்னும் தனது மூத்த பிள்ளையைப் பதினாலு வருஷம் காட்டில் வசிக்கும்படி உத்தரவிட்டார். மற்றவர் ராமனுடைய தம்பி லக்ஷ்மணன். அவர் தமது அண்ணனுக்கும் அண்ணிக்கும் உதவியாய் இருப்பதற்கென்று காட்டுக்கு வந்துவிட்டார். அவர்கள் வந்து வருஷம் பதின்மூன்றாயிற்று. ஒரு வருஷத்தில் திரும்பி அவர்கள் அயோத்திக்குப் போகலாம்"

சூர்ப்பணகைக்கு அவ்வரச குமாரருள் ஒருவரைக் கலியாணம் செய்துகொள்ள ஆசை. ஆனால் அவர்கள் அதை ஒப்பவில்லை. அவள் சீதையைக் கொல்லப்போனாள். லக்ஷ்மணன் அவள் மூக்கையும் காதையும் அறுத்துவிட்டான்.

பிறகு அவர்களை எதிர்த்துவந்த சைனியத்தையும் ராம லக்ஷ்மணர் சிதற அடித்தனர்.

அச்சமாசாரம் ராவணனுக்குத் தெரிந்தது. மேலும்சீதையின் அழகைப்பற்றியும் சூர்ப்பணகை அவனிடம் சொன்னாள். தனது அரண்மனையில் ராவணன் பல தேசங்களிலிருந்து பல அழகிய பெண்களைச் சிறைபிடித்து வைத்திருந்தான். உடனே ஜனஸ்தானத்துக்குப் போய் அவள் தனித்திருந்தபோது சீதையையும் திருடிக்கொண்டு வந்துவிட்டான். அதனால் அச்சகோதரர் மிக்க வருத்தமடைந்தனர். அவளைத் தேடிக்கொண்டு தெற்கில் வந்தனர். கிஷ்கிந்தை என்னும் நகரத்தில் ஆண்ட வாலி அரசனைக் கொன்று அவனுடைய தம்பி சுக்கிரீவனுக்குப் பட்டம் கட்டினர்.

சீதையை ராவணன் கொண்டு போனதைச் சுக்கிரீவன் பார்த்திருந்தான். தனது மந்திரி ஹனுமானையும் பல வீரர்களையும் அவளைத் தேடி வர அனுப்பினான். இலங்கையில் அசோகவனம் என்னும் தோட்டத்தில் சீதை இருப்பதாக அனுமான் பார்த்து வந்து சொல்லினர். பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு ராமலக்ஷ்மணரும் சுக்கிரீவனும் சமுத்திரம் தாண்டி இலங்கையை முற்றுகை இட்டனர். பதினெட்டு நாள் யுத்தம் நடந்தது. ராவணனும் அவன் சைனியமும் அழிந்தன. ராமன் சீதையைச் சிறைமீட்டினான்.

பிறகு அவர்கள் அயோத்திக்குத் திரும்பினர். அங்கு ராமனுக்குப் பிரதிநிதியாய் பரதன் என்னும் அவருடைய தம்பி ஆண்டு வந்தார். திரும்பி வந்த அண்ணனுக்கு உடனே பட்டாபிஷேகம் செய்து வைத்தார். ராமனும் அயோத்தி நாட்டை வெகு சிறப்பாக வெகுகாலம் ஆண்டார். இப்பொழுதும் ராம ராஜ்யம் என்ருல் சிறந்த அரசாட்சி என்று ஜனங்கள் அறிவார்கள்.

கேள்விகள்

1. ராவணன் காலத்திய இலங்கையின் சிறப்பு என்ன?
2. ரிஷிகள் யார்? ராவணன் அவர்களை ஏன் வெறுத்தான்?
3. ஜனஸ்தானத்தில் ராவணனுக்குப் பதிலாக ஆண்டது யார்? அவளுக்குப் பஞ்சவடியில் என்ன நேர்ந்தது?
4. ராமன், லக்ஷ்மணன், சீதை ஆகியவர்களின் வரலாறு என்ன?
5. சூர்ப்பணகையின் ஆசை என்ன? அதனல் அவளுக்கு நேர்ந்த அவமானம் என்ன?
6. சூர்ப்பணகை விரோதத்தால் சீதைக்கு நேர்ந்த விபத்து என்ன?
7. சீதையை ராமன் எவ்வாறு சிறை மீட்டான்?
8. அயோத்தியில் யார் ராமனுக்குப் பதிலாய் ஆட்சி செலுத்திவந்தார்?
9. அயோத்தி எங்கு இருக்கிறது? (முதல் புத்தகத்தைப் பார்க்க.)

5. பீஷ்மர்

வட இந்தியாவில் முற்காலங்களில் பல அரசாங்கங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று குரு நாடு. கங்கையாற்றை ஒட்டியிருந்தது. அதைச் சந்திரவமிசத்தரசர் ஆண்டுவந்தனர். அவர்களில் சந்தனுமகாராஜனுக்கு தேவராதன் என்றொரு பிள்ளை யிருந்தார். நற்குணமுடையராய் அவர் இள வயதிலேயே பல வித்தைகளை அறிந்திருந்தார்.

சந்தனு வயது முதிர்ந்த பிறகு பரிமளகந்தி என்னும் அழகிய ஒரு தாழ்ந்த குடும்பப் பெண்ணைப் பார்த்துக்காதல் கொண்டார். ஆனால் அவளது தகப்பன் அவளை அவர் மணக்க இணங்கவில்லை. அவர் இறந்தால் அவளையும் அவள் குழந்தைகளையும் அரசகுலத்தவர் அலட்சியம் செய்வார்களென அவன் பயந்தான்.

ஆனால் தேவராதன் அக்கலியாணத்தை முடித்து வைத்தார். தமக்குப் பட்டம் வேண்டியதில்லை என்றும் பரிமளகந்திக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கே தாம் பட்டம் கட்டுவதாகவும் சொன்னார். மேலும், "நான் கலியாணமே செய்துகொள்ளுவது இல்லை. இனிப்பிறக்கும் எனது தம்பிமாரே இந்நாட்டை ஆளலாம். நானும் அவர்களையும் அவர்களுடைய சந்ததியையும் ஆதரித்துக் காப்பாற்றுவேன். இது சத்தியம்," என்று சபதம் கூறினார்.

அது பயங்கரமான சபதம். அதனால் அவருக்குப் பீஷ்மர் என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது.

சந்தனு இறந்தபின் பரிமளகந்தியின் குமாரன் விசித்திர வீரியன் குருநாட்டு அரசனானான். பீஷ்மரே அப்பொழுது ராஜ்யகாரியம் பார்த்து வந்தார். தர்மம் நிலைபெற்றது. "அந்நாளில் பயிர்களெல்லாம் செழித்து வளர்ந்தன. பூமி தானியம் நிரம்பி இருந்தது. மேகங்கள் காலா காலத்தில் மழை பொழிந்தன. பழங்களும் புஷ்பங்களும் விசேஷமாய் உண்டாயின. கன்று காலிகளும், பறவைகளும் கூடச் சந்தோஷமாய் இருந்தன. பட்டணங்களிலும், நகரங்களிலும் வியாபாரிகளும் சிறந்த வேலைக்காரர்களும் நிரம்பி இருந்தனர். அங்கு திருடர்களாவது பாவிகளாவது இல்லை. ஹஸ்தினபுரம் நூற்றுக்கணக்கான அரண்மனைகளும் மாளிகைகளும் உடையதாய்ச் சமுத்திரம் போன்று விளங்கியது."

விசித்திர வீரியன் சிறு வயதில் பிள்ளை இல்லாமல் இறந்தான். அதனால் அவனது இரண்டு ராணிகள் அக்கால வழக்கப்படிக்கு அவர்களுக்கு உறவினரான வேதவியாஸர் என்னும் மகாரிஷியிடம் திருதராஷ்டிரன் பாண்டு என்னும் பிள்ளைகளைப் பெற்றனர். வயதான பிறகு திருதராஷ்டிரன் அரசனானான். ஆனால் குருடன். பாண்டுவே பீஷ்மர் புத்தி கேட்டு ராஜகாரியம் பார்த்துவந்தான்.

திருதராஷ்டிரனுக்கு துரியோதனன் முதலான நூறு பிள்ளைகள் பிறந்தனர். பாண்டு ராஜனுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் தர்மபுத்திரர் முதலிய பாண்டவர்கள்.

துரியோதனனுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த சச்சரவு உங்களுக்குத் தெரியும். சூதாட்டத்தில் தமது நாட்டை இழந்து பதின்மூன்று வருஷம் காட்டிலும், நாட்டில் ஒளிந்தும் பாண்டவர்கள் காலம் கழித்தனர். பிறகு உடன்படிக்கைப்படி அவர்கள் தமது ராஜ்யத்தைக் கேட்டனர். துரியோதனன் அப்படிக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை.

இருதிறத்தாரும் சண்டைக்குத் தயாராயினர். குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில் வெகு பயங்கரமாகச் சண்டை பதினெட்டு நாள் நடந்தது. துரியோதனன் முதலானோர் ஒழிந்தனர். பாண்டவர் வெற்றி பெற்றனர்.

இந்த யுத்தத்தில் பீஷ்மர் துரியோதனனுடைய பக்கத்திலிருந்து சண்டை செய்தார். பத்து நாள் வரையில் பாண்டவர்கள் அவரை அசைக்க முடியவில்லை. பிறகு வில்லாளியான பாண்டவ அர்ச்சுனன் அவரைத் தந்திரத்தால் காயப்படுத்தினன். அதன் பிறகு நான்கு மாதம் உயிருடனிருந்து பாண்டவருக்குப் பல தர்ம உபதேசம் செய்து பிறகு அவர் உயிர் நீத்தார்.

அறமே உருக்கொண்ட பீஷ்மர் அயோக்கியனை துரியோதனன் பக்கம் ஏன் சண்டை செய்தார் ? முன்னம் பரிமளகந்திக்குத் தந்த வாக்குத் தத்தத்தை அவர் நிறைவேற்ற வேண்டி இருந்தது. திருதராஷ்டிரன் மஹாராஜா. அவனது நாட்டைக் காத்து அவன் பிள்ளைகளை ஆதரிப்பதே தமது கடமை என நினைத்தார்.

கேள்விகள்

1. சந்தனு, தேவராதன், விசித்திரவீரியன், வேதவியாசர், துரியோதனன், தர்மபுத்திரர், பரிமளகந்தி—யார் ?
2. தேவராதனுக்குப் பீஷ்மர் என்ற பெயர் எவ்வாறு வந்தது ?
3. அவர் ராஜ காரியம் பார்த்த காலத்தில் நாட்டின் சிறப்பைச் சொல்லுக.
4. பாண்டவர் வனவாசம் செய்தது ஏன் ? பிறகு யுத்தம் செய்தது ஏன் ?
5. பீஷ்மர் துரியோதனன் பக்கலில் சண்டை செய்தது சரியா ?
6. குரு நாடு எங்கு இருக்கிறது ?

குறிப்புகள் :

பீஷ்மர் செய்த ராஜ்யபாரத்தின் சிறப்பு மகா பாரதத்தில் சொல்லி யிருக்கிறது.

அஸ்தினபுரம் குரு நாட்டின் தலைநகர்.

6. வர்த்தமான மகாவீரர்

இந்தியாவுக்கு முதலில் வந்த ஆரியர் யாகம் முதலியன அதிகமாகச்செய்து அந்த யாகங்களில் குதிரை, எருது, ஆடு முதலியவற்றைப் பலி கொடுத்தனர். ஆனல் நாளாக ஆக அவர்களில் ஞானிகளான பலர் மிருகபலி தவறு எனச் சொல்ல லாயினர். அவர்கள் அஹிம்ஸையையே (தொந்தரவு செய்யாதிருத்தல், கொலே தவிர்த்தல்) மிகச் சிறந்த தரும மெனப் போதித்தனர்.

இப்பொழுது கூட ஜீவ வதை கூடவே கூடாதென்று மறுத்து வரும் ஜைனர் அநேகர் நமது நாட்டில் இருக்கின்றனர். அவர்கள் வயது சென்றே, கைகால் ஒடிந்தோ, சொந்தக்காரருக்குதவாத கன்றுகாலிகளேயும் குதிரைகளேயும் காப்பாற்ற, 'பிஞ்சரப்போல்' என்னும் மிருக விடுதிகளேப் பெரிய நகரங்களில் கட்டி அவற்றை நடத்திவருகிருர்கள். சிறு எறும்பைக் கொல்லுவது கூட அவர்களுக்குத் தவறெனத் தோன்றும். ஆதலால் நடக்கும்போது வெகு பத்திரமாய் நடப்பார்கள். நீரை வடிக்கட்டி உபயோகிப்பார்கள்.

இந்த ஜைன மதத்தை உலகத்தாருக்கு நன்கு போதித்த பெரியோர் மகாவீரர் என்பவர். அவர் ஒரு ராஜவமிசத்தைச் சார்ந்தவர். தத்துவத்தை ஆராய்ந்து உலக வாழ்க்கையை விட்டார். வெகு நாளாகப் பெரியோர் பலர் தழுவிவந்த அஹிம்ஸை

தர்மத்தைக் கைக்கொண்டார். அதற்கு எதிரிடையான போதனை எல்லாம் பொய்யெனக் கற்பித்தார்.

இந்து மதத்தில் போல் ஜைன மதத்திலும் சந்நியாசிகள் உண்டு. ஜைன சந்நியாசிகள் குகைகளிலும், மனிதர் நடமாட்ட மில்லாத காடுகளிலும் வசித்து வருவார். அவர்களுக்கு இவ்வுலக வாழ்வு பாவமென எண்ணம். அதனால் அவர்களில் முற்றும் துறந்த பலர் முத்தி பெற எண்ணி அன்ன ஆகாரமில்லாது வெயிலில் இருந்து உயிரைத் துறப்பார். அப்படி இறத்தல் மிகச் சிரேஷ்டமென அவர்கள் நினைத்தனர்.

இவ்வளவு தூரம் உலகப்பற்றற்ற இந்தஜைன சந்நியாசிகளில் பலர் காற்று, மழை, வெயிலுக்கஞ்சுவதில்லை. வஸ்திரமே கட்டுவதில்லை. அவர்களைத் திகம்பர ரென்று (திசைகளையே வஸ்திரமாக உடையவர்) அழைப்பார். வேறு சிலர் வெள்ளைத் துணி உடுப்பார். இம்மதத்தினர் பலர் முற்காலத்தில் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் நல்ல பரிசயமுடையவர்களாய்ப் பல நூல்களை இயற்றி யுள்ளார்.

தற்காலத்தில் அஹிம்ஸை தர்மத்தை மகாத்மா காந்தி யடிகள், மனிதர், மதவிஷயத்தில் மாத்திரமல்ல; மனித வாழ்க்கையில் பலவழிகளிலும் அனுஷ்டிக்கவேண்டிய வழி யென வற்புறுத்தியிருக்கிறார். அது நல்ல தர்மமென முதலிலேயே வழி காட்டியவர் மகாவீரர் மகானல்லவா?

கேள்விகள்

1. ஜைனமதத்தாரின் கொள்கை யென்ன ?
2. தற்காலத்தில் ஜைனர் அதை எவ்வாறு பின்பற்றியிருக்கின்றனர் ?
3. அஹிம்ஸை சிறந்த தருமமெனச் சொன்ன ஞானிகள் எதைக் கண்டித்தனர் ?
4. மகாவீரரைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும் ?
5. ஜைன சந்நியாசிகளின் அனுஷ்டானங்கள் எவை ?
6. காந்தி மகான் எவ்வித அஹிம்ஸையைப் போதிக்கிறார்?

7. கௌதம புத்தர்

நமது இந்திய நாட்டில் எக்காலத்திலும் தத்துவத்தில் சிறந்த ஞானிகள் பலர் இருந்து வந்திருக்கின்றனர். வடஇந்தியாவில் ஆரிய ரிஷிகள் பலர் அம்மாதிரியான ஞானிகள் ஆவார். அவர்கள் செய்த தத்துவ விசாரங்களை உபநிஷத் என்னும் நூல்களில் நாம் படிக்கலாம்.



அத்தகைய ஞானிகளில் அரச வம்சங்களைச் சேர்ந்தவர்கள் பலர் உண்டு. விஷ்ணுவின் அவ

தாரம் என்று நாம் சொல்லும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா துவாரகை மன்னர். சீதாதேவியின் தகப்பன் ஜனகனும் ஒரு ஞானியே. அப்படியே புத்த மதத்தையும் ஜைன மதத்தையும் உலகத்தோருக்குக் கற்பித்த மகா புருஷர்கள் இருவரும் அரசவம்சத்தைச் சார்ந்தவர்கள்தாம்.

பௌத்தமதத்தை ஸ்தாபித்தவர் சித்தார்த்தர் என்பவர். இவர் சாக்கிய அரசவம்சத்தைச் சேர்ந்தவர். பட்டத்துக்கு உரியவர். தமது பெற்றோர்களால் வெகு அருமையாக, துக்க அனுபவம் ஒன்றும் தெரியாமலேயே, வளர்க்கப்பட்டவர். குணத்திலும் ரூபத்திலும் சிறந்த பெண்மணியை மணந்தார். ஒரு குழந்தையும் பிறந்தது; என்றால் உலகத்தில் சகல போகங்களும் அவருக்கு இருந்தன வென்று சொல்லலாம்.

ஆயினும் அவருக்கு இச்சிறந்த வாழ்வு கூடப் பிடிக்கவில்லை. மனிதருக்கு இவ்வுலகிலேயே துக்கம் வியாதி மூப்பு மரணம் முதலியன இயல்பென அவர் வெகு எளிதில் அறிந்தார். இவ்வுலகில் கஷ்டப் பட்டாலும் இறந்த பிறகு மனிதருடைய ஆத்துமா வேறுலகில் சுகமாயிருக்குமா என்னும் கவலை அவருக்கு உண்டாயிற்று. மேலுலகில் ஆத்துமா சுகித்திருப்பதென்றால் இவ்வுலகில் எல்லாவற்றையும் வெறுத்துக் கடவுளையே அடைய வேண்டும் என்று சிலர்

போதித்தனர். அப்படியே சித்தார்த்தர் தமது தாய் தகப்பன்மனைவி மகன் நாடுநகரம் எல்லாவற்றையும் துறந்தார். காட்டில் காய்கிழங்குகளைப் புசித்துரிஷிகளைப்போல் கொடியதவம் புரிந்தார். ஆயினும் அவருக்கு மனக்கவலை போகவில்லை. அமைதி ஏற்படவில்லை.

சித்தார்த்தர் சிறந்த ஞானி. ஆதலால் தமக்கு ஏன் அமைதி உண்டாகவில்லைஎன்று நுட்பமாய் யோசனை செய்தார். கவலைக்குக் காரணம்யாது? அது ஆசையே ஆகும். ஆசையை ஒழித்தால் அமைதி ஏற்படலாம் என்று பிறர் சொல்லுவதை நினைத்து பார்த்தார். இவ்வுலகப்பற்று தனக்குச் சிறிதும் இல்லாத போதிலும் அமைதி ஏற்படவில்லையே. அதுஏன்? என்று சிந்தித்தார். இவ்வுலகப்பற்று போயும், பேருலக ஆசை தமக்குக் கவலையைத் தந்ததென அறிந்தார். பேருலக ஆசையும் தவறெனக்கண்டார். அவ்வாசையையும் ஒழித்தார்.

ஆசையே இல்லாத மனிதன் எப்படி வாழலாம் என மறுபடி யோசனை செய்தார். ஒருவன்

நல்ல மனதுடையவனாய் நற்செய்கைகளையே செய்து நல்வார்த்தையையே பேசுவது சரி எனத் தீர்மானித்தார். அப்படிச் செய்யும் மார்க்கத்தை வகுத்தார்.

தம்மைப் போன்று உலகை வெறுத்து இருக்கும் துறவிகளுக்கு மிகக் கண்டிப்பான கடமைகளை ஏற்படுத்தினர். உலக வாழ்க்கையில் கலந்து பெண்சாதி பிள்ளைகளுடன் வாழும் மனிதர்களுக்கு விதித்த கடமைகள் அவ்வளவு கண்டிப்பு அல்ல.

இக்கடமைகளைத் தவருது செய்து வாழும் மாந்தர் இவ்வுலகைத் துறந்த பிறகு நிர்வாணம் என்னும் மறுபிறப்பில்லாத தன்மையை அடைவார். அல்லவென்று நெறிதவறினல் அப்பாவத்தைக் கழிக்க மறுபடி இவ்வுலகத்தில் பிறக்கவேண்டும் எனப் போதித்தார்.

சித்தார்த்தர் சிறந்த ஞானவானனதால் அவருக்கு புத்தர் என்னும் சிறப்புப் பெயர் கிடைத்தது. அவர் மதமும் பௌத்த மதமெனப் பெயர்பெற்றது. பௌத்தருள் ஜாதி வித்தியாசம் கிடையாது. தாம் செய்யுங் கருமத்தினலேயே பெரியோர் சிறியோர் என மனிதருள் பேதம் ஏற்படுகிறது. ஜீவஹிம்ஸை மிகப் பாவம் எனப் புத்தர் போதித்தார்.

இம்மதத்தைக் கொஞ்ச காலத்திலேயே அனேகர் பின்பற்றினர். பல அரசர்களும் இம்மதத்தில் சேர்ந்தனர்.

கேள்விகள்

1. முற்காலத்தில் அரசஞானிகளில் சிலரைச் சொல்லுக ?
2. சித்தார்த்தர் முதலில் வாழ்ந்த சிறப்பென்ன ?
3. அவர் ஏன் அதை மதிக்கவில்லை ?
4. ஆத்தும சுகத்துக்காக முதலில் எம்மார்க்கத்தைப் பின் பற்றினர் ?
5. கடைசியில் அவர் என்ன தீர்மானத்துக்கு வந்தார் ?
6. சாதாரண மனிதருக்கும் துறவிகளுக்கும் என்னென்ன வாழ்க்கை விதி ஏற்படுத்தினர் ?
7. புத்தமதத்தின் முக்கிய கொள்கைகள் எவை ?

8. சந்திரகுப்த மௌரியர்

கங்கை நதி விந்திய மலைக்கு வடக்கிலுள்ள தாழ்ந்த சமநிலத்தில் பாய்ந்து அம்மலையின் கிழக்குக் கோடிக்கு இப்பால் தெற்குமுகமாய்த் திரும்புகிறது. அந்த இடத்துக்குச் சற்றுமேற்கில் பாடலிபுரம் என்றொரு பழைய பட்டணம் உண்டு. அது மகதம் என்னும் பெயர்பெற்ற நாட்டுக்கு முற் காலத்தில் பிரதான நகரமாய் இருந்தது. அங்கு இரண்டாயிர வருஷங்களுக்குமுன் ஒரு பெரிய அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவர் பெயர் சந்திரகுப்த மௌரியன்.

சந்திரகுப்தன் தனது நண்பனான சாணக்கி யன் என்னும் பிராமணனுடைய சாமர்த்தியத்தால்

பட்டத்துக்கு வந்தான். அப்பொழுது மகத ராஜ்யத்தின் அரசன் மஹாபத்ம நந்தன் என்பான். அவன் அரசாண்ட நாடு மிகப் பெரியது. சிறப்புற்றது. ஆயினும், அவனது குடி ஜனங்கள் அவன் ஆட்சியை விரும்பவில்லை.

சந்திரகுப்தன் நந்த அரசனுக்கு உறவினன். ஒருவேளை தன்னைத் தொலைத்து ஜனங்கள் இச் சந்திரகுப்தனுக்கு பட்டங்கட்டுவார்களோவென்று நந்தனுக்குப் பயம் உண்டு. ஆகையால் அவனையும் அவன் அண்ணன்மாரையும், அவர்களுடைய தகப்பனான தனது மந்திரியையும் தந்திரமாய்க் கொலைசெய்ய ஏற்பாடு செய்தான். அதனால் சந்திரகுப்தன் தவிர மற்றெல்லோரும் ஒழிந்தனர்.

பிறகு சந்திரகுப்தன் ஒரு சாதாரண உத்தியோகத்தில் அமர்ந்தான். ஆனால் தனது நற்குணத்தாலும், சாமர்த்தியத்தாலும் எல்லோருக்கும் நண்பனானன். அப்பொழுது நந்தன் இறுமாப்பினால் சாணக்கியன் என்பவனை அவமதிப்பாக நடத்தினான். அவ்வந்தணன் பல சாஸ்திரம் கற்றுணர்ந்தவன். ராஜ்யதந்திர நிபுணன். அர்த்த சாஸ்திரமென்னும் சிறந்த நூலை இயற்றியவன். அவன் அப்பொழுது 'நந்த குலத்தை ஒழித்து விடுவேன்' எனச் சபதம் செய்தான். சந்திரகுப்தனுடன் சேர்ந்து அயல் நாடுகளிலிருந்து அரசர்களுடைய ஒத்தாசையைத் தேடினான்.

அப்பொழுது அலெக்ஸாந்தர் என்னும் கிரேக்க வீரன் வடமேற்கு இந்தியாவில் பல அரசர்களை எதிர்த்து வெற்றி பெற்முன். அவனி டம் சந்திரகுப்தன் ஒத்தாசை கேட்கச் சென்ருன். ஆனல் கிரேக்க வீரர்கள் அதற்கு இணங்கவில்லை.

அலெக்ஸாந்தர் தமது தேசத்துக்குத் திரும்பி ஞன். அப்பொழுது சந்திரகுப்தன் அங்கு பல நாடுகளைப் பிடித்தான். பெரிய ஒரு சைனியத் தையும் இட்டு வந்து நந்தனை எதிர்த்து யுத்தம் செய்து அவன் குலத்தை அழித்தான்.

சந்திரகுப்தன் மகத நாட்டை ஆண்டகாலத் தில் அது மிகவும் ஓங்கிவளர்ந்தது. விந்திய மலைக்கு வடக்கிலுள்ள இந்திய நாடெல்லாம் அவன் கைக்குள் வந்தது. மேற்கிலுள்ள மலைகளுக்கு அப்பாலுள்ள நாட்டையும் கைப்பற்றி ஆண் டான். அவனது காலத்தில் பாடலிபுரம் மிகவும் பெரிய நகரமாய் இருந்தது. இவ்வரசனும் ஏராள மான சைனியமும் பொருளும் உடையவனுய் வெகு சீராக வாழ்ந்தான்.

ஆயினும் தனது முதிர்ந்த வயதில் அவ்வி ராஜ்யத்தைத் தனது பிள்ளை பிம்பிசாரனிடம் ஒப்பு வித்து இவ்வரசன் ஒரு ஜைன சந்நியாசி ஆனன். அவனுக்கு உலக வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டது. அவன் மனதை அப்படி மாற்றியவர் ஒரு ஜைன மத குரு. ரிஷிகளைப்போல் உலகப் பற்றின்றி

ஜைனரும் பௌத்தரும் கூட அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர் அல்லவா?

தனது குரு தெற்கு நோக்கி பன்னீராயிரம் சீஷர்களுடன் மைசூருக்குச் செல்லவே, அவனும் அவருடன் கூடவே சென்று அங்கு வெகு நெறியுடன் சிறிதுகாலம் ஒரு சந்நியாசியாக வாழ்ந்து பிறகு தன் உயிர் துறந்தான்.

புத்த மதத்தை உலகெங்கும் பரவச்செய்த பெரியோனான அசோக சக்கரவர்த்தி இச் சந்திர குப்தனின் பேரனும்.

கேள்விகள்

1. பாடலிபுரம் எங்குளது? அது எப்படிப் பெயர் பெற்றது?
2. மகாபத்மநந்தன் யார்? அவனுக்குச் சந்திரகுப்தனிடம் என்ன பயம்? அவ்வீரனுடைய குடும்பத்தாருக்கு அவன் என்ன தீங்கு விளைவித்தான்?
3. சந்திரகுப்தன், சாணக்கியன் — இவர்களின் குணாதிசயமென்ன?
4. அவ்விருவரும் நந்தனைத் தொலைக்க என்னென்ன காரியம் செய்தனர்?
5. சந்திரகுப்தனின் ராஜ்யம் எங்கெங்கு எட்டியிருந்தது?
6. முதிர்ந்த வயதில் சந்திரகுப்தன் செய்த காரியங்கள் எவை?

9. அசோக சக்கரவர்த்தி

சந்திரகுப்த மௌரியன் ஏற்படுத்திய மகத ராஜ்யம் பல சிற்றரசர்கள் உள்ளடங்கியது. ஆகையால் அவன் அரசருக்கும் அரசன் ஆவான். அவ்விதப் பேரரசருக்கு ராஜாதிராஜர் அல்லது சக்கரவர்த்தி என்று பெயர்.

சந்திரகுப்த சக்கரவர்த்தி நல்ல போர்வீரனல்லவா ? அப்படியே அவனுடைய மகனும் பேரனும் யுத்தத்தில் தேர்ந்தவர்கள். அவன் மகன் வடஇந்தியாவுக்குத் தெற்கில் மலைநாட்டில் ஆந்திர தேசத்தைக் கைப்பற்றினான். பேரனான அசோக சக்கரவர்த்தியோ ஆந்திரத்துக்குக் கிழக்கேயுள்ள கலிங்கநாட்டைக் கைப்பற்றினார். அதனால் அந்நாட்டினருக்கு உண்டான உயிர்ச்சேதத்தையும் கஷ்டத்தையும் கண்டு அவர் மிக்க வருந்தினார். இனிமேல் யுத்தம் செய்வதில்லை எனத் தீர்மானித்தனர். தமது வாழ்நாளைத் தமது ராஜ்யத்தைச் செம்மையாக ஆள்வதில் போக்கினர்.

அசோக சக்கரவர்த்தி புத்தபகவான் போதித்த சிறந்த மதத்தைக் கைக்கொண்டார். தமது குடிஜனங்கள் புத்தர் விதித்த நீதிமார்க்கத்தில் ஈடுபடப் பாடுபட்டார். "எல்லா மனிதரும் எனக்கு என் பிள்ளைகளைப் போன்றவர் ; என் பிள்ளைகளை எப்படி இவ்வுலகிலும் பேருலகிலும் சுகமாகவும் ஒரு குறைவும் இல்லாமலும் வாழவேண்டுமென்று

நினைக்கிறேனே, அப்படியே மனிதரெல்லோரும் வாழவேண்டும் என்பது எனது விருப்பம்" என்று அவர் சொல்வதுண்டு.

அவரது நாடு பல தேசங்களாகப் பிரிந்துள்ளது. ஆங்காங்கு புத்தரது கொள்கைகளையும், தமது உத்தரவுகளையும் என்றும் அழியாதிருக்கும்படி கற்பாறைகளிலும், ஸ்தம்பங்களிலும் வெட்டி வைத்தார். அவைகள் அவருடைய ராஜ்யத்தில் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. வடமேற்கிலுள்ள பெரிய மலைகளிலிருந்து, தெற்கே கிருஷ்ண நதிவரையிலும் கிழக்கில் ஆஸாமிலிருந்து மேற்கே மைசூர் வரையிலும் அப்பாறைகளும் ஸ்தம்பங்களும் காணப்படுகின்றன.

அவற்றில் அவர் எழுதி வைத்த சிலவாக்கியங்கள் பின்வருமாறு:—"தர்மம் எது? தீமையைத் துறந்து நன்மையைச் செய்வதே தர்மம். அன்பும் உண்மையும் சாந்தமும் சுத்தமும் தர்மநிலையாம். மேலும், தீதில்லா மனமும், குளிர்ந்த வார்த்தையும், காரியமும். எல்லோருக்கும் நன்மையும், பெற்றோரிடம் வணக்கமும், பிள்ளைகளிடம் அன்பும், எளியாரிடம்பரிவும், எல்லா ஜந்துக்களிடமும் தயையும், குருமாரிடம் வணக்கமும், தானமும், கோபமின்மையும், சத்துவகுணங்களாம்." மேலும் புத்தபகவான் வாக்கெல்லாம் சிறப்புடையதெனச் சொன்னார். தமது விஸ்தாரமான நாட்டில் ஜனங்

கள் தர்ம வழியில் நடக்கிருர்களா வென்று பார்க்கத் தர்மாதிகாரிகளை நியமித்தார்.

ஆனல் பௌத்தரல்லாதவேறுமதத்தினரைத் துவேஷம் செய்யவில்லை. தாம் போதித்தபடி தமது வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொண்டார். வேட்டையாடுவதை நிறுத்தினர். மாமிசத்தைத் தவிர்த்தார். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென் ருர். பெரியோரைத் தரிசித்து ஆதரித்தார். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வியாதியைக் குணப் படுத்தப் பல வைத்தியசாலைகளைக் கட்டினர்.

புத்தருடைய மதபோதனை தமது ராஜ்யத்தில் மட்டும் அல்ல, எங்கும் பரவவேண்டு மென்பது அவரது ஆசை. இந்தியாவில் தெற்குக் கோடியிலுள்ள தமிழ் நாடுகளுக்குப் புத்த சன்னியாசிகளை அனுப்பிப் புத்த மதக் கொள்கைகளை ஜனங்களுக்குப் போதிக்கச் செய்தார். அதற்கும் தெற்கிலுள்ள சிம்மளத் தீவுக்குத் தனது சகோதரன் மகேந்திரனையும் சகோதரி சங்கமித்திரையையும் அனுப்பினர். அவர்கள் அத்தீவுக்குப் போகும்போது கயையிலுள்ள ஆலமரத்தின் கிளை ஒன்றைக் கொண்டு போய் அதை அங்கு நட்டனர். கயையிலுள்ள ஆலமரத்தின் அடியில்தான் புத்த பகவான் ஞான சித்திபெற்ருர். அதுமுதல் பௌத்தருக்கு அது பூஜிக்கத்தக்க மரமாயிற்று. அதற்குப் போதி மர மென்று பெயர். சிம்மளத்தில் நட்ட கிளை தற்

போது 2200 வயதான மகா விருக்ஷமாக இருக்கிறது. புத்த மதமும் அங்கு நன்ருக வேரூன்றிவிட்டது.

அம்மாதிரியே அவர் இந்தியாவுக்கு வடக்கிலும் மேற்கிலுமுள்ள ஆசியாக்கண்ட நாடுகளிலும் புத்தமதம் பரவக் கற்ருேர்களையும் சன்னியாசிகளையும் அனுப்பிப் பாடுபட்டார். மனிதருக்குச் சன்மார்க்கத்தைப் போதிக்க இவ்வளவு முயற்சி செய்த அசோக சக்கரவர்த்தி பெரியோனல்லவா?

கேள்விகள்

1. சக்கரவர்த்தி என்னும் பெயரை யாருக்குத் தருவார்கள்?
2. மகத ராஜ்யத்துடன் பிம்பிசாரனுலும் அசோகராலும் சேர்க்கப்பட்ட நாடுகள் எவை? அசோகரது ராஜ்யம் எவ்வளவு பெரியது?
3. அசோகரது மனம் கலிங்க யுத்தத்தால் எவ்வாறு மாறுபட்டது?
4. அசோகர் தழுவிய மதம் என்ன? அம்மதம் எங்கும் பரவ வேண்டுமென்று அவர் ஏன் விரும்பினர்?
5. அதற்காகத் தமது விஸ்தாரமான ராஜ்யத்தில் அவர் என்ன செய்தார்?

6. தமது நாட்டுக்கு (1) தெற்கிலும் (2) மேற்கிலுமுள்ள நாடுகளில் அம் மதம் பரவ அவர் செய்த காரியம் என்ன ?

7. அவருடைய கல்வெட்டுகளில் கண்ட சில விஷயங்களைச் சொல்லுக.

8. பௌத்தரான பிறகு அசோகர் வாழ்க்கை எவ்வாறு மாறுத லடைந்தது?

10. சேரன் செங்குட்டுவன்

தென்னாட்டில் முற்காலத்தில் பெயர் பெற்ற மூன்று ராஜ்யங்கள் இருந்தன. அவை சேர சோழ பாண்டிய நாடுகளெனப் பெயர் பெற்றவை. இந்தியாவின் தெற்குக் கோடியில் உள்ளது பாண்டியநாடு. அதற்கு வடக்கே கிழக்குக் கரையை ஒட்டி இருந்தது சோழநாடு. மேற்கில் இருந்தது சேரநாடு. இவை எல்லாம் சேர்ந்து தமிழகம் ஆயிற்று. தமிழகம் என்றால் தமிழின் இருப்பிடம் என்று அர்த்தம். அதன் எல்லையை வடக்கில் வேங்கடமலை (திருப்பதி), தெற்கே கன்னியாகுமரி, கிழக்கிலும் மேற்கிலும் கடல் எனச் சொல்லுவார்.



சேர சோழ பாண்டிய அரசர்கள் அனுதி பரம்பரை யுடையவர்கள். அவர்களுக்குள் "நான் பெரியவன், நான் பெரியவன்" என்கிற சச்சரவு ஏற்படுவதுண்டு. அச்சமயத்தில் ஆளும் இம்மூவேந்தர்களில் யார் பலவானே தைரியவானே அதிருஷ்டசாலியோ அவன் வெற்றி அடைவான்.

வெகு காலத்துக்கு முன் அம்மாதிரி அரசர்களில் செங்குட்டுவன் என்னும் பெரியோன் சேர நாட்டில் அரசாண்டான். இவன் சிறந்த யுத்த வீரன். அக்காலத்திய பாண்டிய நாட்டு அரசரையும் சோழ நாட்டு அரசரையும் சண்டையில் வென்ருன். ஆதலால் அப்பொழுது உள்ள மூவேந்தரில் அவனே சிறந்தவனெனப் பெயர் பெற்று விளங்கினுன்.

ஒரு நாள் ஒரு அந்தணன் அவனது சபைக்கு வந்தான். அவன் அதற்குமுன் வட இந்தியாவில் யாத்திரை செய்து பல சிறந்த ஸ்தலங்களைத் தரிசித்துப் பல அரசருடைய சபைகளைப் பார்த்திருந்தான். அப்பொழுது ஆரிய அரசரான (விந்திய மலைக்கு வடக்கில் உள்ள இந்தியாவின் பாகத்துக்கு ஆரியா வர்த்தம் அல்லது ஆரியம் எனப் பெயர்) நூற்றுவர் கன்னர் தென்னுட்டினரை பழித்துப் பேசினதாகச் சொன்னுன். அது செங்குட்டுவனுக்குப் பொறுக்கவில்லை. உடனே தனது நாட்டிலிருந்து ஒரு பெரிய சேனையைத்

திரட்டிக்கொண்டு வடநாடு நோக்கிச் சென்றான். மலைகளையும் காடுகளையும் தாண்டி நூற்றுவர் கன்னர் நாட்டை அடைந்து அவர்களுடன் கடும் போர் புரிந்தான். அவர்களைச் சிறைபிடித்து அங்கிருந்து இமயமலையின் அடிவாரம் வரையில் சென்றான். அங்கு ஒரு பிரதிமை செய்யப் போதுமான கல்லை அம்மலையில் எடுத்து, வீரம் பேசிய நூற்றுவர் கன்னரை அதைச் சுமந்து வரச் செய்தான்.

தன் நாடு சேர்ந்தவுடன் அக்கல்லைக் கண்ணகி தேவியின் பிரதிமையாகச் செய்யும்படி தேர்ந்த கல்தச்சருக்குக் கட்டளை யிட்டான். இக்கண்ணகி ஓர் சிறந்த தரும பத்தினி. தன்னைப் பலவழியில் வருத்தத்துக்கு ஆளாக்கிய புருஷனைக் கைவிடாது அவனுடன் சோழ நாட்டிலிருந்து பாண்டி நாட்டுக்கு வந்தாள். அங்கு மதுரைமா நகரில் அவள் கணவன் திருடன் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். கண்ணகிக்கு அது சகிக்க முடியவில்லை. இறந்த தன் புருஷன் குற்றவாளி யல்லவென எல்லாரும் அறிய நிரூபித்தாள். பிறகு அவ்வூராரைச் சபித்து மேற்கு நோக்கிச் சென்றாள்.

அவ்விடமெல்லாம் மலை நாடு. எங்கும் பாறைகளும் குன்றுகளும் இருக்கும். அவைகளைத் தாண்டி அவள் பேரியாற்றின் கரையில் வேடர் இருந்த ஓர் சிற்றூரை அடைந்தாள். அப்பொழுது



தன் புருஷன் குற்றவாளியல்லவெனக் கண்ணகி நிரூபிக்கிறாள்.

மேலுலகிலிருந்து ஓர் விமானம் வந்து அவளை அழைத்துச் சென்றதாம்.

செங்குட்டுவ ராஜன் பொழுது போக்குக்காக அவ்வூருக்கு வந்தான். அவனது குடிஜனங்களான அவ்வூரார் அவனிடம் இவ்வதிசயத்தை உரைத்தனர். அதைக் கேட்டு ஆச்சரியமடைந்து அப்பத்தினிக்கு ஒரு கோவில் கட்டுவதெனத் தீர்மானித்திருந்தான். இமயமலைக் கல்லாலான கண்ணகியின் இவ்வடிவத்தை ஒரு கோவிலில் வைத்துப் பல திருநாளும் கொண்டாட ஏற்பாடு செய்தான்.

பத்தினி தேவியின் கதை அதிசயமானது. அதைச்செங்குட்டுவ அரசன் தம்பியான இளங்கோ அடிகள் என்னும் புத்த சமயத் துறவி தமிழில் சிலப்பதிகாரம் என்னும் புத்தகமாய் எழுதினர்.

கேள்விகள்

1. தமிழகம் என்று எதற்குப் பெயர்? அதன் எல்லையென்ன?

2. அதில் ஆண்ட அரசகுலங்கள் எவை? அவை தமிழ் நாட்டின் எந்தெந்தப் பாகத்திலுள்ளன?

3. செங்குட்டுவன் யார்? அவனுக்குத் தமிழ்நாட்டில் கிடைத்த சிறப்பென்ன?

4. அவன் எதற்காக வட இந்தியா மீது படையெடுத்தான்? அப் படையெடுப்பின் வரலாறு என்ன?

5. கண்ணகி தேவி யார்? அவளுடைய கதையைச் செங்குட்டுவன் எவ்வாறு தெரிந்துகொண்டான்? (அவள் கதையை உபாத்தியாயரைக் கேட்டு அறிக).

6. அத்தேவியின் ஞாபகத்துக்காக அவன் என்ன செய்தான்?

குறிப்பு

அனாதி பரம்பரை யுடையவர்கள் — நெடு நாட்களாக அரசாண்ட குலங்களைச் சார்ந்தவர்கள்.

11. குதிரை யாகம்

இந்தியாவின் வடபாகத்தில் உள்ள கங்கை பாயும் பூமி மிகச் சிறந்தது. அங்கு இமய மலையிலிருந்து உற்பத்தியாகி ஓடிவரும் பல நதிகள் பாய்கின்றன. அவை எல்லாம் ஒருநாளும் காயாது வருஷ முழுவதும் நீர் தரும் நதிகள் அல்லவா? அங்கு கோடைகால மழையும் பெய்வதுண்டு. ஆதலால் அந்நாடு மிகச் செழிப்பானது. மனிதர் உணவுக்குரிய பல தானியங்களும் வேறு பொருள்களும் அங்கு ஏராளமாய் விளைகின்றன. ஆகையால் அங்கு ஜனநெருக்கம் அதிகம்.

இந்தக் கங்கா நதியின் கரையிலும் அதன் உப நதிகளின் கரைகளிலும் ஆதிமுதல் பல சிறந்த பட்டணங்கள் இருந்து வருகின்றன. அயோத்தி என்னும் ஸ்ரீராமபிரான் அரசாண்ட நகரம் அவற்றில் ஒன்று. இந்துக்களால் சிறந்த புண்ணிய

க்ஷேத்திரம் என்று மதிக்கப்படும் காசிமா நகரம் ஒன்று. தற்போது இந்தியாவிலேயே பெரிய தென விளங்கும் கல்கத்தா நகரம் இவ்வாற்றின் கிளை ஒன்றின்மேல் இருக்கிறது.



கங்கை நதிப்பிரதேசம்

மங்கலான பாகங்கள் 1000 அடிக்குமேல் உயரமானவை.

பாடலீபுரமும் அவ்விதம் சிறந்த ஒரு நகரமல்லவா? சந்திரகுப்த மௌரியர் அசோக சக்கரவர்த்தி முதலானோர் ஆண்ட மகத நாட்டுக்கு அது முக்கிய நகரமல்லவா?

அசோக சக்கரவர்த்திக்குப் பிறகு வெகுகாலம் கழித்துச் சமுத்திரகுப்தன் என்று ஒரு பெரியோன் மகத நாட்டரசனக இருந்தான். அவன் சிறந்த யுத்த வீரன். வடஇந்தியாவில் மாத்திரமல்ல,

தென்னிந்தியாவில் உள்ள நாடுகளையும் பிடிக்க எண்ணங் கொண்டான்; அதற்காகப் பெரிய சைனியம் ஒன்று சேர்த்தான். அதைக் கொண்டு வட இந்தியாவை ஜயித்தான். பிறகு வங்காளத்தைத் தாண்டி தென்னிந்தியாவில் உள்ள பல நாடுகளை ஜயித்தான். காஞ்சீபுரம், பாலக்காடு முதலிய பட்டணங்கள் அவன் வசமாயின. பிறகு மலை, காடு முதலியவற்றைத் தாண்டி பல நூறு காதம் சென்று கடைசியாய்ப் பாடலீபுரத்தை அடைந்தான். இதெல்லாம் மூன்று வருஷம் பிடித்தது.

அவன் செய்த காரியம் கஷ்டமானது. நல்ல சாமர்த்தியம் உள்ளவர்களே அதைச் சாதிக்க முடியும். அதனால் அக்காலத்தில் இருந்த இந்திய அரசருக்குள் அவனே சிரேஷ்டமானவன் என்று எல்லோரும் மதித்தனர்.

இப்படி வெற்றி அடைந்த வீரரான அரசர்கள் தாம் அடைந்த வெற்றிகளைச் சிறப்பிக்கக் குதிரை யாகம் செய்வதுண்டு. ஒரு நல்ல ஜாதிக் குதிரையை ஒரு வருஷகாலம் அதற்கு எங்கே போகப் பிரியமோ அங்கெல்லாம் போக விடுவார்கள். அதைப் பின் தொடர்ந்து ஒரு சேனை அதைப் பாதுகாக்கச் செல்லும். யாராவது அக்குதிரையைப் பிடித்துக் கட்டினால் அந்தக் காப்புச் சைனியம் அவர்களுடன் சண்டை செய்யும்.

ஒரு வருஷம் ஆனவுடன் அதைத் திரும்ப அழைத்துவந்து பலி கொடுத்து யாகம் என்று ஒரு கருமத்தைச் செய்வார்கள். சமுத்திரகுப்த சக்கரவர்த்தி அப்படி ஒரு குதிரையாகம் செய்தான். அப்பொழுது அவனுக்குக் கீழ்ப்படிந்த பல சிற்றரசர்கள் அங்கு வந்தார்கள். வந்தபொழுது அவர்கள் ஏராளமான பணத்தையும் பல பொருள்களையும் கொண்டு வந்தார்கள். அவற்றை யெல்லாம் யாகத்தில் செலவிடவென்று தமது பேரரசனிடம் தந்தனர்.

அந்த யாகம் மிகப் பெரிய காரியம். அதைப் பார்க்க லக்ஷக்கணக்கான ஜனங்கள் வந்து கூடினர். வந்தவர்களுக்கெல்லாம் பலநாள் வரையில் சாப்பாடும் பணமும் அரசன் கொடுத்தான். தன்னிடம் ஒரு காசுகூட மிஞ்சாது எல்லாவற்றையும் வந்தவர்களுக்குத் தந்தான். ஜனங்கள் அவனை வாழ்த்திக்கொண்டு சுகமாக அவன் ராஜ்யத்தில் வாழ்ந்தனர். இந்தியாவில் முன்னாளில் ஆண்ட பேரரசர் பலர் நல்ல தருமவான்கள்.

கேள்விகள்

1. கங்கைபாயும் பூமி எவ்வாறு சிறந்தது ?
2. அவ்விடத்திலுள்ள பழைய நகரங்களில் சிலவற்றைச் சொல்லுக.
3. சமுத்திரகுப்தனைச் சிறந்த யுத்தவீரனென்று எப்படிச் சொல்லலாம் ?

4. குதிரை யாகம் என்றால் என்ன? அதை யார் செய்வார்?

5. குதிரை யாகம் செய்பவர் செய்ய வேண்டிய காரியமென்ன?

6. சமுத்திரகுப்தன் முடிவில் என்ன செய்தான்?

12. பிரயாகையில் ஒரு பெரும் கோடையாளி

"எல்லாம் தொலைந்த தல்லவா! தலையை முழுகு," என்று நமக்குள் சொல்வதுண்டு. தமக்குள்ள எல்லாச் செல்வத்தையும் தானமாகக் கொடுத்து ஒழித்து, கடைசியாக ஒரு புண்ணிய தீர்த்தத்தில் தலை முழுகுவது என்பது முற்காலத்தில் தருமத்தில் ஈடுபட்ட பெரியோர்களின் வழக்கமாயிருந்தது.

இந்தியாவில் உள்ள ஜனங்கள் அக்காலங்களில் நீதி முறைப்படி நடப்பார்கள். அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய வழி தர்ம சாஸ்திரங்கள் என்னும் நூல்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. சாதாரண ஜனங்கள் மாத்திரம் அல்ல, அரசர்களும் அவ்வழி நடப்பார்.

கங்கா நதிக்கு யமுனை என்று பெயர் பெற்ற உபநதி ஒன்றுண்டு. அதன் கரையில் "ஸ்தாணு ஈசுவரம்" என்ற சிறந்த நகரம் இருந்தது. "ஸ்தாணு" என்று மஹா விஷ்ணுவின் பெயர்.

'ஈசுவரன்' என்று சிவன் பெயர். இந்துக்கள், தொழும் இவ்விரு தெய்வங்களின் பெயரால் அந்நகரம் முதலில் ஏற்பட்டு இருக்கவேண்டும்.

அங்கு ஹர்ஷவர்த்தனன் என்று ஓர் அரசன் 1300 வருஷங்களுக்கு முன் ஆண்டான். அப் பெயருக்கு "சந்தோஷத்தை விருத்தி செய்பவன்" என்று அர்த்தம் அவன் "கயை"யில் புத்த மடம் கட்ட இடம் தந்த சமுத்திரகுப்த மஹா ராஜனுக்கு இருநூறு வருஷங்கள் கழித்து அரசாண்டான். அவன் நல்ல தர்மவான். புத்த பகவான் கற்பித்த தர்ம வழியைப் பின் தொடர்ந்தான். ஆயினும் அவனது நாட்டில் உள்ள ஜனங்கள் இந்து தர்மத்தையாவது ஜைன தர்மத்தையாவது வேறு தர்மத்தையாவது அனுஷ்டித்தால், அவர்களிடம் அவனுக்கு வெறுப்பில்லை. தனது தலைநகரில் ஒரு பெரிய புத்தர் கோவில் கட்டி அதில் ஒவ்வொரு வருஷமும் பெரிய திருநாள் கொண்டாடுவான். அச்சமயங்களில் அவனது நண்பர்களான வேறு அரசர்கள்கூட அங்கு வருவதுண்டு. பல நாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தரிசனத்துக்கு வருவார்கள்.

இவ்வரசன் ஆண்ட நாடு, கங்கை, யமுனை போன்ற எப்பொழுதும் ஜலம் வரும் ஜீவ நதிகள் பாயும் நாடாகையால், அது வளம் மிகுதி உடையது. மிக அதிகமாக அதிலிருந்து

பொருள் கிடைக்கும். அவற்றை எல்லாம் இவ்வரசன் தர்மத்திலேயே செலவு செய்வது வழக்கம்.

கங்கையும் யமுனையும் ஒன்ருகக் கலக்குமிடத்து திருவேணி என்னும் ஓர் புண்ணிய தீர்த்தம் உண்டு. அங்கு ஹர்ஷ மஹாராஜன் ஐந்து வருஷத்துக்கு ஒரு தரம் பெரிய திருநாள் கொண்டாடுவதுண்டு. அப்பொழுது புத்த பகவானுக்கு அநேக நாள் உற்சவம் நடக்கும். உற்சவம் முடிந்ததும் கடைசி நாளில் திருவேணி தீர்த்தத்தில் விக்கிரகத்தை நீராட்டிப் பிறகு கோவிலுக்குக் கொண்டு போவார்கள். அப்பொழுது தனது பொருள்களை எல்லாம் அங்கு வந்திருந்தவர்களுக்குத் தானம் செய்வான். நல்லோர் பெரியோரான எல்லோருக்கும் கொடுப்பான். அவர்கள் புத்தரா இந்துக்களா ஜைனரா என்று பார்ப்பதில்லை. கோயில்களுக்கும் மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் அவன் தாராளமாய்த் தருவான். கடைசியாய் அவனிடம் ஒரு காசுகூட மிஞ்சுவது இல்லை. தான் உடுத்தி இருந்த வஸ்திரத்தையும் அணிந்து கொண்ட ஆபரணங்களையும் கூடக் கொடுத்து விடுவான். ஒரு பழைய வஸ்திரத்துடன் திருவேணிக்கு முழுகச் செல்லுவான். ஜனங்கள் எல்லோரும் "ஜயா விஜயீபவா" என்று வாழ்த்திக்கொண்டு அவன் கூடவே செல்லுவார்.

ஹர்ஷ வர்த்தனன் சிறந்த யுத்தவீரன். பல ராஜ்யங்களை வென்றவன். நல்ல ஞானமுடையவன். தர்மவழி நடக்கும் சீலம் உடையவன். அரசர்கள் இவன்போ லல்லவா இருக்கவேண்டும்!

கேள்விகள்

1. "ஸ்தாணு ஈசுவரம்" "ஹர்ஷவர்த்தனன்" என்னும் பெயர்களுக்கு அர்த்த மென்ன?
2. ஹர்ஷவர்த்தனனுடைய குணாதிசயமென்ன?
3. புத்தரை அவ்வரசன் எப்படிக் கொண்டாடுவான்?
4. "திருவேணி" என்பதென்ன?
5. ஹர்ஷ சக்கரவர்த்தி அதனருகில் ஒரு சமயம் என்ன பெரிய காரியம் செய்தான்?
6. அவன் தனது பெரும் பொருளை வித்தியாசம் பாராது தந்தான் என்று எப்படிச் சொல்லலாம்?
7. இவ்வரசன் எதனால் மேன்மை பெற்றவன் எனலாம்?

13. மஹேந்திரவர்மனும் புளகேசியும்

தென்னாட்டில் அரசாண்ட மூவேந்தரில் சில சில சமயங்களில் திறமை இல்லாத அரசர்கள் ஆளுவதுண்டு. சோழநாட்டில் அரசாண்ட சோழ மன்னரைப் பல்லவர் என்னும் ஒரு அரச குலத்தவர் சிறிது சிறிதாகத் தோற்கடித்து அவர்களது ராஜ்யத்தில் பெரும் பாகத்தைக் கைப்பற்றிக்

கொண்டனர். அப்பொழுது சோழ அரசர் ஒரு சிறிய நாட்டில் சிற்றரசராக ஆள நேரிட்டது. பல்லவர்கள் தாம் கைப்பற்றிய நாட்டில் பெரும் கீர்த்தியும் பெற்று வெகுநாள் பல தலைமுறைகளாக அரசாண்டனர்.

அவர்களில் பெயர் பெற்ற மஹேந்திரவர்மன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் பல வழிகளிலும் சிறந்தவன். சண்டையில் வல்லவன். தனது தோள் வலியால் தனக்கு அயலாரான அரசரை ஜயித்து வடக்கே கிருஷ்ண நதி வரையில் தன்னுடு எட்டும்படி செய்தான். சேர சோழ பாண்டியர் அவனைக் கண்டு பயப்படுவார்.

அப்பொழுது இந்திய நடுநாட்டில் புளகேசி என்னும் ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனும் பெரிய படையை உடையவன். ஆரிய நாட்டிலிருந்து தன்னை எதிர்த்தபேரரசனுனஹர்ஷவர்த்தனரையே ஒரு பெரிய போரில் தோற்கடித்தான்.



இதனுல் புளகேசிக்குஇறுமாப்பு உண்டாயிற்று. பல நாடுகளை ஜயித்துப் பெரிய அரசனுக வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. தன்னுட்டுக்

குத் தெற்கில் உள்ள தேசங்களைக் கைப்பற்றினான். கடைசியாய்க் கிருஷ்ணா ஆற்றைத் தாண்டிப் பல்லவ நாட்டில் புகுந்தான்.

அப்பொழுது மஹேந்திரன் அவனைத் துரத்தமுடியவில்லை. புளகேசியின் சேனை துரத்த, பல்லவ அரசன் தனது தலைநகரான காஞ்சீபுரத்தின் கோட்டைக்குள் ஒளிந்தான். ஆனால் புளகேசி அந்நகரை முற்றுகைபோட்டும் அதைப் பிடிக்க முடியவில்லை. சிலநாள் கழித்துத் தனது நாட்டை நோக்கிப் புறப்பட்டான். அவன் திரும்புங்கால் மஹேந்திரன் பெரிய சேனையுடன் அவனை எதிர்த்து புல்லலூர் என்னும் இடத்தில் தோல்வி அடையச் செய்தான்.

மஹேந்திரவர்மன் தனது குடி ஜனங்களைச் செவ்வனே ஆண்டான். தனது நாட்டில் பல ஏரிகளை வெட்டினான். காடுகளை அழித்தான். அதனால் அங்குள்ளார் புது நிலங்களைச் சீர்திருத்தி நன்றாகச் சாகுபடி செய்ய முடிந்தது.

இவ்வரசனுக்குக் கடவுள் பக்தி அதிகம். பலவிடங்களில் அவன் அழகிய கோவில்களைக் கட்டினான். அதற்காகத் திறமை வாய்ந்த கல்தச்சர்களைக் கொண்டு மலைகளைக் குடைந்து ஒரே கல்லாக கோவில் தூண்கள், பற்பல சித்திரங்கள், கடவுள் பிரதிமைகள் முதலியன இருக்கும்படியாகச் செய்தான். அப்படிச் செதுக்குவது மிக்கக் கடினமான

வேலே. இப்பொழுது அப்படிச் செய்பவர் நமது தேசத்திலேயே கிடையாது. அக்காலத்தில் கல் சிற்பிகள் பலர் திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர். அக் கோவில்கள் தமிழ் நாட்டில் காஞ்சீபுரத்திலும், புதுக்கோட்டை சமஸ்தானத்திலும், நாமக்கல் முதலிய இடங்களிலும் இருக்கின்றன. தெலுங்கு நாட்டில் விஜயவாடா (பெஜவாடா) என்னும் பட்டணத்திலும் ஒரு கோவில் இருக்கிறது. அவ்வாறே பல வர்ணங்களேக் கொண்டு கண்ணேக் கவரும் சித்திரங்களே சிறந்த படம் எழுதுவோர் எழுதி இருக்கின்றனர். கடவுள் பக்தியில் ஈடுபட்ட ஆழ்வார்களும் அப்பர் சம்பந்தர் என்னும் தேவாரப் புலவர்களும் விஷ்ணுவையும் சிவனேயும் புகழ்ந்து துதி பாடினர்கள். மஹேந்திரனே சிறந்த ஞானமுடையவன்.

பழைய இந்திய அரசர்களில் மஹேந்திரன் மிகச் சிறப்புவாய்ந்த பெரியோன்.

கேள்விகள்

1. பல்லவர் யார்? அவர்கள் எங்கு அரசாண்டனர்? முதன் முதலில் அவர்களுக்கு எப்படி நாடு கிடைத்தது?

2. மஹேந்திரவர்மன் சிறந்தயுத்தவீரனென்று எப்படித் தெரியும்?

3. புளகேசி யார்? அவன் ஏன் இறுமாப் படைந்தான்?

4. அதனால் அவன் என்ன காரியம் செய்தான்?

5. புளகேசிக்கும் மஹேந்திரவர்மனுக்கும் நடந்த யுத்தத்தில் முதலில் யாருக்கு வெற்றி கிடைத்தது? கடைசியில் யாருக்கு?

6. மஹேந்திரன் தனது ஜனங்களுக்குச் செய்த நன்மைகளென்ன?

7. மஹேந்திரன் நல்ல கடவுள் பக்தியுடையவன் என்பதற்கு அடையாளமென்ன?

8. மஹேந்திரன் கோவில்கள் எங்கெங்கு இருக்கின்றன?

9. வேறென்ன விஷயங்களில் இவ்வரசன் சிறந்தவன்?

10. அக்காலத்தில் விஷ்ணுவையும் சிவனையும் பற்றித் துதி பாடிய பெரியோருக்கு என்னென்ன பெயர்?

14. முகம்மது நபிநாயகம்

மனிதர் கடவுளைப் பல வழிகளில் தொழுவார். இந்துக்கள் வழிபட்ட கடவுளரின் பெயர் சிவன், விஷ்ணு என்று சொல்லி அவருக்குச் சிறந்த கோவில்களைக் கட்டி அவற்றில் விக்கிரகங்களை வைத்துத் தொழுகிறார்கள். கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் வேறு பலரும் விக்கிரகத்தைப் பூஜை செய்வதில்லை. கிறிஸ்தவர்களுடைய கோவில்களுக்குச் 'சர்ச்' (தேவசபை) என்று பெயர். முகம்மதியர் ஆலயங்கள் 'மசூதிகள்' என அழைக்

கப்படும். அவற்றுள் எங்கும் உள்ள கடவுளை அவ ரவர்களுக்கு ஏற்பட்ட விதிப்படி தொழுவார்கள்.

அப்படி அவர்கள் செய்வதற்கு அந்தந்த மதக்காரருக்குப் போதனை செய்த ஆதிகுருவே காரணம். முகம்மதியர்களுக்கு "முகம்மது" என்னும் பெரியோர் முதல் குரு. அவரை நபிநாயகம் என மரியாதையுடன் அழைப்பார்.

முகம்மது நபிநாயகம் அரேபியா நாட்டில் பிறந்தார். அது ஆசியாக் கண்டத்தின் மேற்குக் கோடியில் உள்ள பெரிய தேசம். ஆசியா என்னும் பெரிய கண்டத்தில் நமது தேசமான இந்தியாவும் வேறு பல பெரிய தேசங்களும் இருக்கின்றன அல்லவா?

முகம்மது பிறந்த இடம் மக்கா என்னும் அழகான நகரம். தமது தாய் தகப்பன்மாரை அவர் சிறு வயதிலேயே இழந்தார். பிறகு அவர் மாமன் அவரை வளர்த்து வந்தார். தமது மாமனுடன் வியாபாரத்துக்காகத் தமது தேசத்தைச் சுற்றியுள்ள பல தேசங்களுக்கு அவர் யாத்திரை போவார். அங்கெல்லாம் ஜனங்கள் கடவுளைத் தொழும் முறையை அறிந்திருந்தார்.

நபிநாயகம் இளவயது முதல் கடவுளைக் குறித்துச் சிந்தனை செய்வார். இருபத்தைந்து வயதில் அவருக்குக் கலியாணம் ஆயிற்று. வியா

பாரம் செய்வதை விட்டுத் தமது மனைவியுடன் வாழ்ந்தார். அப்பொழுது ஒவ்வொரு வருஷமும் ஒரு மாதகாலம் ஒரு மலைக்குகையில் ஒருவர் கண்ணிலும் படாமல் இருந்துவருவார். அங்கு கடவுளைப் பற்றியே சிந்தனை செய்வார்.

ஒரு சமயம் அவருக்குக் கடவுளை வழிபட, சரியான ஒரு புதிய மார்க்கம் தோன்றிற்று. அதை அவர் அந்நாட்டில் உள்ளோருக்குப் போதனை செய்தார். அவர் போதித்தது "இஸ்லாம்" மதம். இஸ்லாம் என்னும் வார்த்தைக்கு, கடவுளின் திருவுள்ளத்துக்கு முற்றும் கீழ்ப்படிதல்" என்று அர்த்தம். "ஆதியந்தம் இல்லாதவர் கடவுள். இந்த பிரபஞ்சத்தை எல்லாம் அவர் சிருஷ்டித்தார். அவர் எல்லாம் அறிந்தவர். எதையும் செய்யச் சக்தியுடையவர்," என்று முகம்மது போதித்தார்.

'கடவுளுடைய வாக்கானது உலகத்தில் நபி என்னும் பெரிய ஞானிகள் மூலம் எல்லோருக்கும் போதிக்கப்பட்டு இருக்கிறது. அந்நபிகளில் முக்கியமானவர் முகம்மது' என்றும் கற்பித்தார். "அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை. முகம்மதுவே அவரது நபி" என்று நம்பினவர்கள் "முஸ்லீம்கள்" என்றும் அவர் போதனை செய்தார்.

முஸ்லீம்கள் தினம் ஐந்து தடவை சுத்தமாயிருந்து மெக்கா முகமாய்த் திரும்பிக் கடவுளைத் தொழவேண்டும். எளியவர்களுக்குப் பிச்சை இட

வேண்டும். முடிந்தால் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது மெக்காவுக்கு யாத்திரை செய்ய வேண்டும்.

மெக்காவில் அனேகர் அவர் படிப்பினையை உண்மை எனத் தெரிந்து அவரது சீடர் ஆனார். ஆனால் வேறு பலர் அவரை எதிர்த்தனர். அவரை மெக்காவிலிருந்து மதீனாவுக்கு ஓடும்படியும் செய்தனர். மதீனாவிலோ பெரும்பான்மையோர் அவரை உண்மையான நபி என்று ஒப்புக்கொண்டனர். மதீனாக்காரர் உதவியைக்கொண்டு முகம்மது மறுபடி மெக்கா வந்து சேர்ந்தார். அவரது மதம் அரேபியா முழுவதும் பரவியது. மேலும் அவர் அந்நாட்டுக்கு அரசரும் ஆனார்.

முகம்மது நபி காலத்துக்குப் பிறகு மேற்கு ஆசியாவில் வேறு பல நாடுகளும் இஸ்லாம் மதத்தை ஒப்புக்கொண்டன. உலகில் பரவியுள்ள பெரிய மதங்களில் இம்மதம் ஒன்றும்.

கேள்விகள் :

1. இந்துக்கள் பூஜை செய்வதற்கும் வேறு மதத்தினர் பூஜை செய்வதற்கும் என்ன வித்தியாசம்?
2. முகம்மதியர், கிறிஸ்தவர் ஆசியவர்களின் தேவாலயங்களுக்கு என்ன பெயர்?
3. முகம்மதியரின் ஆதிகுரு யார்? அவர் எங்கு பிறந்தார்? அந்நகரம் எத்தேசத்தில் இருக்கிறது?

4. அவரது இளமையை அவர் எப்படிக் கழித்தார்?
5. நபி நாயகத்தின் சிறந்த குணம் யாது?
6. அவர் போதித்த மதத்தின் பெயர் என்ன? அவ்வார்த்தையின் அர்த்தம் யாது?
7. இஸ்லாம் மதத்தின் படிப்பினைகள் என்ன?
8. முஸ்லீம்கள் தமது வாழ்நாளில் செய்ய வேண்டிய சில கடமைகளைச் சொல்லுக.
9. நபி நாயகம் மதத்தைப் போதனை செய்ய ஆரம்பித்த போது என்ன நடந்தது?
10. இஸ்லாம் மதம் இப்பொழுது எங்கு முக்கியமாய்ப் பரவியிருக்கிறது? (முதல் புத்தகத்தில் படம் பார்க்க.)

15. ராஜ ராஜ ஈசுவரம்

வேங்கட மலைக்கும் குமரி முனைக்கும் இரு கடல்களுக்கும் நடுவில் உள்ள தமிழகம் தொன்று தொட்டுச்சேரசோழபாண்டிய அரசர்களால் ஆளப் பட்டு வந்ததல்லவா? சிற்சில காலங்களில் அவர்களில் வெற்றி வீரனான அரசன் தன் அண்டை நாடுகளை ஜயித்து வசப்படுத்துவது உண்டு. சேர அரசனான செங்குட்டுவன் தன் காலத்தில் இருந்த சோழர் பாண்டியர் முதலிய பல அரசர்களை எதிர்த்து வெற்றி பெற்றான் அல்லவா?

சுமார் ஆயிர வருஷங்களுக்குமுன் ராஜராஜன் என்னும் சோழ அரசன் தஞ்சைமா நகரில் அரச

னுகப் பட்டம் பெற்றான். இவன் தகப்பன் பாட்டன் முதலானோர் அவனுக்கு முன்னமே தென் இந்திய அரசர்களை யுத்தத்தில் தோல்வியுறச் செய்து, சோழ நாட்டைப் பலமுடையதாகச் செய்திருந்தனர். ராஜ ராஜன் அவர்கள் வழிசென்று சோழ அதிகாரத்தைத் தென்னிந்தியாவிலும் சிம்



தஞ்சாவூர் கோவில்

மளத் தீவிலும் தக்ஷிணத்தின் பாகங்களிலும் கூட பரவச் செய்தான். தனது கப்பல் படையால் காந்தளூர் சாலை என்னுமிடத்தில் சேர அரசரின் கப்பல்களை மூழ்க்கினான். பிறகு மைசூரைக் கைப் பற்றினான். வேலூரிலிருந்து விசாகபட்டணம்

வரையில் பரவி இருந்த வேங்கி நாட்டையும், அதற்கப்பால் உள்ள களிங்க நாட்டையும் கைப் பற்றினன். தென்மேற்கில் உள்ள இரட்டைப்பாடி என்னும் சாளுக்கிய நாடும் அவன் கைவசமாகியது. ஆகவே அவன் ஒரு பெரிய சக்கரவர்த்தி ஆனன். தென் இந்தியாவில் உள்ள மூவேந்தர் நாடும் அவன் கீழ் வந்ததால் அவனுக்கு 'மும்முடிச் சோழன்' என பட்டப் பெயர் வந்தது.

தனது நாட்டிலிருந்தும் தான் தோற்கடித்த அரசர்களிட மிருந்தும் அளவற்ற பொருள் அவனுக்குக் கிடைத்தது. அச் செல்வத்தைத் தன் நாட்டுக்கு உபயோகமாகப் பல வேலைகளில் செல வழித்தான்.

அக்காலத்து அரசர்கள் கோயில் கட்டுவது என்னும் திருப்பணி வேலை தமது முக்கிய தருமம் என நினைத்தனர். அப்படி ஒவ்வொரு அரசரும் மற்றும் பணக்காரரும் கட்டிய கோவில்கள்தான் நமது நாட்டில் பல கிராமங்களிலும் பட்டணங்களிலும் இப்பொழுதும் காணப்படுகின்றன.

ராஜ ராஜனும் அப்படிப் பல கோவில்களைக் கட்டினன். அவற்றுள் மிகப் பெரியதும் சிறந்ததும் தஞ்சையில் உள்ள பிருகதீசுவர (பெரிய சிவன்) ஆலயமாம். அதற்கு அவ்வரசன் இட்ட பெயர் ராஜராஜ ஈசுவரம் என்பது. சாஸ்திர

முறையை அனுசரித்து, சிறிதும் பிசகின்றி அது கட்டப்பட்டது. அங்குள்ள 'நந்தி' ஒரே கல்லால் ஆனது; மிகப் பெரியது. மஹா கோபுரம் வெகு நீள அகலமுடையது. ஏறக்குறைய இருநூறு அடி உயரமானது. அதன் நாலு பக்கங்களிலும் உள்ள சிலை உருவங்கள் எண்ணிறந்தவை. சிறிது இடைவெளி கூட அவற்றில் கிடையாது. ஒவ்வொரு சிலையும் மிக்க அழகு வாய்ந்தது. கோபுர நுனியில் உள்ள பெரிய விமானம் ஒரே கல்லால் ஆனது. நான்கு மைலுக்கு அப்பால் உள்ள சாரப்பள்ளம் என்னு மிடத்திலிருந்து சாரங்கள் கட்டிப் பஞ்சுப் பொதிகளின் மேல் உருட்டி வந்து உயர வைக்கப்பட்டதாம்.

அக் கோவிலுக்குத் தினம் பூஜை நடக்க, தனது விஸ்தாரமான ராஜ்யத்தில் பல கிராமங்களை அவ்வரசன் மானியமாகத் தந்தான். அதில் பிரதிஷ்டையான தங்க விக்கிரகங்கள் பல. அவ்விக்கிரகங்களுக்கு அலங்காரம் செய்ய அவன் கொடுத்த ஆபரணங்களும் பலவாம். அவனது சகோதரியும் ராணிகளும் வேறு பல திருப்பணிகளைச் செய்தனர். அங்கு பூஜையை முறைப்படி நடத்த ஏற்பட்ட பணியாளர் வெகு பேர். இச் சிறந்த கோவிலில் 900 வருஷத்துக்குமேல் பூஜை தவறாது நடந்து வந்திருக்கிறது என்பது ஆச்சரியமல்லவா?

கேள்விகள்

1. ராஜராஜ சோழனுடைய தலைநகர் எது? அவன் ஜயித்த நாடுகள் எவை?
2. அவனுக்குக் கிடைத்த பட்டம் என்ன?
3. அக்காலத்திய அரசரும், பணக்காரரும் எந்தக் காரியத்தைப் பெரிய தருமமென நினைத்தனர்?
4. ராஜராஜன் கட்டிய பெரிய கோவில் எது? அதன் பெயரென்ன? அங்குள்ள சிவபெருமானின் பெயரென்ன?
5. அக்கோவிலின் சிறப்பைச் சொல்லுக.
6. விமானக்கல்லை எப்படிக் கோவிலின் உச்சிக்குக் கொண்டு போனார்கள்?
7. அக்கோவில் திருப்பணி, உற்சவங்கள் ஆகியவற்றைப் பற்றி என்ன விசேஷம்?

குறிப்புகள்

சிலை — கல்லில் செதுக்கிய உருவம். விமானம் — கோயிலின் உச்சி. மானியம் — அரசர்கள் தந்த நிலம். திருப்பணி — தேவருக்குத் தொண்டு.

16. சோமநாதபுரம் கோவில்

சோமன் என்றால் சந்திரன். நாதன் என்றால் காப்பாற்றுபவன். சந்திரனைத் தனது முடியில் வைத்திருப்பதால் சிவபெருமானுக்குச் சோமநாதன் என்ற பெயர் உண்டு.

இந்தியாவின் மேற்குக் கடலை ஒட்டிக் கத்தியவார் என்று ஒரு தீபகற்பம் உண்டு. அது குர்ஜர நாட்டின் பாகம். அதன் தென்மேற்குக் கோடியில் ஒரு பட்டணத்தில் சோமநாதர் ஆலயம் ஒன்று இருந்தது. அங்கு அதுவே முக்கியமானதால்



அப்பட்டணத்துக்குச் சோமநாதபுரம் என்று பெயர் வந்தது.

கடலை ஒட்டி ஒரு பாறையில் கோயில் கட்டப்பட்டு இருந்தது. சமுத்திர ஜலம் சில சமயங்களில் அப்பாறையில் மெதுவாய் வந்து படும். விசையான சமுத்திரக் காற்று அடிக்கும் நாட்களில் அலைகள் அங்கு வந்து பெரிய இரைச்சலுடன் பலமாய் மோதும். ஆயினும் ஒரு நாளும் கடல் பாறைமேல் பெருகினதில்லை. அங்குள்ள பெரியோர் சோமநாதருக்குக் கடல் அடிமை என்று சொல்லுவார்.

இக்கோவில் ஆயிர வருஷங்களுக்கு முன் நம் நாட்டில் மிக்க பெயர்பெற்ற கோவில்களில் ஒன்றும். இத்தேசத்தின் பல பாகங்களில் இருந்தும் ஜனங்கள் அங்கு சென்று தெய்வத்தை வணங்கிக் கோவிலுக்கு விலை உயர்ந்த காணிக்கைகளைச்

செலுத்திப் போவார்கள். ஆகையால் அங்கு தங்க மும் இரத்தினங்களும் அளவில்லாமல் இருந்தன.

900 வருஷங்களுக்கு முன் ஒரு முகம்மதிய அரசன் சோமநாதபுரத்தைத் தனது சைனியத் தோடு முற்றுகை போட்டான். அதாவது அச் சைனியம் அவ்வூரைச் சுற்றிக்கொண்டது. முகம் மதியர் திடீரென வந்ததால் அவர்களை எதிர்க்க இந்து சைனியம் தயாராக இல்லை. மூன்று நாள் சென்றபின் முகம்மதிய அரசனான கஜினிமாமூது அவ்விடத்தை எளிதில் கைப்பற்றினான்.

முகம்மதியர் நபிநாயகத்தின் மதத்தைச் சார்ந் தவர். அவர்களுக்குப் பிற மதங்களில் மிக்க வெறுப்பு உண்டு. வடமேற்கு இந்தியாவில் அவர் கள் அக்காலத்தில் அடிக்கடி படை எடுத்து வந்து பல நகரங்களைக் கொள்ளை அடித்து இந்துக்க ளின் கோவில்களை இடித்துத் தள்ளுவது வழக்க மாக இருந்தது. சோமநாதபுரம் மிக்க செல்வம் நிறைந்த இடம் என்று கண்டு, கொள்ளையில் ஆசை யாலும் கோவிலில் உள்ள வெறுப்பாலும் கஜினி மாமூது மலை நிறைந்த நாடுகளையும் வழியில் ஒரு பாலைவனத்தையும் தாண்டி அங்கு வந்தான்.

சோமநாதபுரம் கொள்ளையிடப்பட்டது. பிறகு மாமூது அரசன் கோவிலில் புகுந்தான். அங்குள்ள இந்தியப் பெரியோர் வேண்டிய பொருள் தருவ தாகச் சொல்லி விக்கிரகத்தை உடைக்காது விடும்

படி கேட்டனர். மாமூது அதை ஒப்புக்கொள்ள வில்லை. தனக்கு 'விக்கிரகத்தைத் தகர்த்தவன்' என்னும் பட்டம் வேணுமென அவனுக்கு ஆசை உண்டு. ஆகையால் ஒரு கோடரி எடுத்து அங்குள்ள லிங்கத்தைத் தூளாக உடைத்தான். அளவற்ற பொருள்களைக்கொண்டு தன் நாடு சென்றான்.

மாமூது கொள்ளை அடிக்கவென்றே காரணமில்லாது பல நாடுகளைப் படை எடுத்துச் சென்றவன். இந்நாட்டிலிருந்து கணக்கற்ற ஆண்களையும், பெண்களையும் கைதிகளாகக்கொண்டுபோய்த்தனது நாட்டில் அவர்களை அடிமைகளாக ஆக்கினான்.

கேள்விகள்

1. சிவபெருமானுக்குச் சோம நாதன் என்னும் பெயர் எப்படித் தகும்?
2. சோமநாதபுரம் எங்கு இருக்கிறது?
3. சோமநாத சுவாமிக்குக் கடல் அடிமை என்று ஏன் ஜனங்கள் நம்பினார்கள்?
4. சோமநாத புரத்தை முற்றுகை செய்த முகம்மதிய அரசன் யார்?
5. அது அவனது வசமானபொழுது அவன் என்ன செய்தான்? ஏன் அவ்வாறு செய்தான்?
6. வட இந்தியாவில் அக்காலத்தில் முகம்மதியர் என்ன கொடுமை செய்தனர்?
7. இந்திய நாடுகளை கஜினி மாமூது ஏன் படையெடுத்து வந்தான்?

17. ஸ்ரீரங்கம் கொள்ளை

நமது தென்னுட்டில் இந்து மதத்தினருக்குரிய கோவில்களில் ஸ்ரீரங்கம் கோவில் பெயர் பெற்றது. உயர்ந்த மதிள்சுவர்களும் அழகிய வீடுகளும் சூழ இருக்கிறது. ஸ்ரீரங்கமே ஒரு தீவு. காவிரியாறு அப் பட்டணத்துக்குப் பத்து மைல் மேற்கே இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து பத்து மைல் கிழக்கே மறுபடி ஒன்று சேருகிறது. அப்படிச் சேர்ந்து ஜலம் வீணுகாமல் இருக்க ராஜராஜன் அங்கு ஒரு அணை கட்டினனல்லவா?

முழுதும் நீர் சூழ்ந்திருப்பதால் இத்தீவு வெகு செழிப்பானது. எங்கும் தென்னை, மா முதலிய மரச்சோலைகள் நிரம்பியது.

இங்கு கோவில்கொண்டிருக்கும் ரங்கநாதரைத் தரிசிக்க இந்நாட்டில் பல பாகங்களிலிருந்தும் வரும் பிரயாணிகள் வெகு பெயர். அக்கோவிலில் உற்சவங்களும் வெகு நன்ருயிருக்கும்.

சுமார் 600 வருஷங்களுக்கு முன் ஒரு சித்திரை மாதத்தில் இக் கோவிலில் ஒரு உற்சவம் வெகு நன்ருய் நடந்து வந்தது. அங்கு கடவுளைத் தரிசிக்கவந்தவர்களில் பெயர்பெற்ற வைணவமதாசாரியர் இருவர் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் பிள்ளை லோகம்ஜீயர் என்பவர். மற்றவர் வேதாந்த தேசிகர்.

அவ்வுற்சவம் காவிரியின் வடகிளையாகிய கொள்ளிடத்தின் மணலில் ஒரு நாள் மத்தியானத்தில் நடந்தது. அப்பொழுது திடீரென்று ஒரு பயங்கரமான பேச்சு உண்டாயிற்று. 'முகம்மதியக் கொள்ளைக்காரர்கள் வந்து விட்டார்கள்' என்று சிலர் ஆற்றின் மறுகரையைச் சுட்டிக்காட்டினர்.

குதிரை வீரர் பலர் கையில் வாள் முதலியன ஏந்தி ஆற்று மணலில் வந்துகொண் டிருந்தனர். அவர்களைக் கண்டு பலர் நடுங்கிப் பல திக்குகளிலும் ஓடினர். சிலர் கடவுள் விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு தென்காவிரி தாண்டி அருகிலுள்ள காட்டுக்குள் மறைந்தனர். பெரும்பாலார் சத்துருவை எதிர்பார்த்து நின்றனர். அவர்களிடம் ஆயுதம் ஒன்றுமில்லை. நிச்சயமாய்ச் சத்துருக்கள் கையில் சாவை எதிர்பார்த்தே அவர்கள் நின்றனர்.

வந்தவர் அவர்களில் புகுந்து வெட்டித்தள்ளிச் சூறையாடினர். காவிரியாற்று மணலில் எங்கு பார்த்தாலும் ரத்தம். எங்கு பார்த்தாலும் பிணம். காயம் பட்டவர் ஓலமிடும் சப்தம் நிறைந்திருந்தது. பிள்ளை லோகம் ஜீயர் என்னும் பெரியோன் கொலையுண்டு கிடந்தார். வேதாந்த தேசிகர் கொல்லப்படவில்லை. கொள்ளைக்காரர் உடனே ஸ்ரீரங்கத்துள் புகுந்து கோயிலையும் வீடுகளையும் இடித்து அழித்து ஆண் பெண் குழந்தை எனப்பாராமல் ஜனங்களைக் கொன்று பொருள்களைக் கொள்ளை யிட்டனர்.

முகம்மதிய சேனை அங்கிருந்து மதுரை நோக்கிச் சென்றது. ரங்கநாதர் விக்கிரகத்தை எடுத்துச் சென்றவர்களும் காட்டுப் பாதைகள் வழியாய் வெகு கஷ்டப்பட்டு அதைப் பரிபாலித்து வந்தனர். இந்த விக்கிரகம் மறுபடி ஸ்ரீரங்கத்துக்குவர ஒரு தலைமுறைக்கு மேல் பிடித்தது.

அம் முகம்மதிய சேனை அக்காலம் டில்லியில் அரசாண்ட முகம்மது துக்லக் என்னும் சுல்த்தானால் தென் இந்தியாவைக் கைப்பற்ற அனுப்பப் பட்டது. வரும் வழியில் எங்கும் கொள்ளையடிப்பது சண்டை செய்யும் போர்வீரருக்கு வழக்கமாக இருந்து வருகிறது. முகம்மதிய வீரர் வட இந்தியாவில் இயற்றிய கொடுமைகள் பல. தென் இந்தியாவில் அவர்களுக்கு அவ்வளவு செய்யச் சமயங்கள் கிடைக்கவில்லை.

பிறகு இந்நாட்டில் தங்கிய முகம்மதியர் இங்குள்ளவரோடு பழகி ஒத்து வாழவும் செய்கின்றனர்.

கேள்விகள்

1. ஸ்ரீரங்கம் எங்கு இருக்கிறது? ஸ்ரீரங்கத்தீவின் சிறப்பு என்ன? அங்கு கோவில் யாருக்கு இருக்கிறது?
2. அங்கு முன்னொரு காலத்தில் நடந்த உற்சவத்தின் போது என்ன நேர்ந்தது?
3. அவ்வுற்சவத்துக்கு வந்திருந்த பெரியோர் யார்?
4. முகம்மதியர் அவ்வுற்சவத்தை எவ்வாறு கலைத்தனர்?

5. கடவுளின் விக்கிரகம் எப்படிக் காக்கப்பட்டது?

6. அங்கிருந்த ஜனங்கள் என்ன பாடுபட்டனர்?

7. முகம்மதியருக்கும் இந்துக்களுக்கும் தற்போது ஏற்பட்டுள்ள சம்பந்தம் எவ்வாறுனது?

18. வித்தியா நகரம்

ஸ்ரீ சங்கராச்சாரியார் எனப் பெயர்பெற்ற மதாசாரியர் மைசூர் நாட்டில் சிருங்கேரி என்னு மிடத்தில் ஒரு மடத்தை ஏற்படுத்தி யிருந்தார். அதில் அப்பெரியோருக்குப் பிறகு பல சிறந்த சன்னியாசிகள் மடாதிபதிகளாக இருந்து வந்தனர். அவர்கள் ஞானத்தில் சிறந்தவர்கள். தங்கள் வாழ்நாளை இந்து சாஸ்திரங்களில் சொல்லியபடி தர்மமாய்க் கழிப்பார்கள்.

அவர்களில் வித்தியாரண்ய சுவாமி என்றுஒருவர் சுமார் 600 வருஷங்களுக்குமுன் அம்மடத்தில் மடாதிபதியாய் இருந்தார். அவர் மகாவித்துவான். தேசபக்தி யுடையவர். இந்தியா செழித்துச் சீருடையதாக விருக்கவேண்டு மென்று அவர் ஆசை.

ஆனல் அவர் காலத்தில் தென் இந்தியாவில் இருந்த ஜனங்களுக்கு ஒரு பயம் நேரிட்டது. வட இந்தியாவிலிருந்து முகம்மதிய அரசர் இத்தேசத்தின் தென்பாகத்தைப் பிடிக்கச் சைனியங்களை

அனுப்பினர் அல்லவா? அச் சைனியங்கள் இங்குள்ள அரசரைத் தோற்கடித்து, முக்கியப் பட்டணங்கள் பலவற்றைக் கொள்ளையடித்து, ஆண், பெண், பாலரென்று பாராது எல்லாரையும் கொலைசெய்தன. அதை எவ்வாறு தடுப்பதென்று வித்தியாரண்யர் கவலையுற்றனர்.

ஒரு சமயம் துங்கபத்திரைக் கரையில் பம்பா நகரத்துக்கடுத்த காட்டில் அவர் ஒரு ஆசிரமத்தில் வசித்தார். அப்பொழுது ஒருநாள் ஹரிஹர ராயர், புக்கராயர் என்ற இரண்டு சகோதரர் அவரிடம் வந்தனர். அவர்கள் சேனைத் தலைவர்கள். ஆனகுந்தி என்னும் ஊரில் ஆண்ட அரசனுடைய வீரர்கள். முகம்மதியர் ஆனகுந்தியையே கைப்பற்றிக் கொள்ளையடித்தபோது ஜனங்கள் பட்ட கொடுமையைப் பார்த்தவர்கள் மறுபடி முகம்மதியர் தென்னிந்தியாவில் புகாமல் இருக்க அவர்கள் வழிதேடினர். வித்தியாரண்யர் அவர்களை ஒரு புது ராஜ்ய மேற்படுத்தும்படி தூண்டினர். அதில் இந்து மதமும் அதன் தர்மங்களும் நிலைபெற வேண்டுமென்று உரைத்தார். அவர்கள் எல்லோரும் ஆனகுந்திக்குப் போகப் புறப்பட்டனர்.

துங்கபத்திரை நதிக்கரை வந்ததும் அவர்களுக்கு அவ்விடத்திலேயே ஒரு நகரம் கட்டலாமென்று தோன்றிற்று. அவ்விடத்தைச் சுற்றிப் பார்த்தபொழுது அங்கு ஒரு மலைக்குகையில்

பழைய காலத்தில் ஒளித்து வைத்திருந்த ஒரு
புதையல் கிடைத்ததாம். மிக அதிகமான பணக்
குவியல்களும் ரத்தினங்களும் அதில் இருந்ததாம்.
அதைக்கொண்டு அங்கேயே ஒரு பெரிய நகரம்



கட்டினர். அதற்கு வித்தியா
நகரம் எனப் பெயரிட்டனர்.
அதுவே விஜயநகரமாகி
ஒரு பெரிய சாம்ராஜ்யத்துக்
குத் தலைநகராகியது.

அவ்விராஜ்யத்தின் முதல்
அரசன் ஹரிஹரர். புக்கர்
அவனது சேனாதிபதியா
னான். வித்தியாரண்யர் ஹரி
ஹராருக்கு மந்திரியாகவும் ஆசிரியராகவும் இருந்
தார். அது ஏற்பட்டது முதல் மூன்று நூற்
றாண்டுகளுக்கு முகம்மதியரால் தென் இந்தியா
வுக்குப் பயமே இல்லை. விஜயநகர ராஜ்யமும்
கிருஷ்ணை துங்கபத்திரை நதிகளின் தெற்கிலுள்ள
தென்னிந்தியா முழுவதையும் தன்னுள்ளடக்கிக்
கொண்டது.

விஜயநகரம் காலக்கிரமத்தில் பெரியதாய்
வளர்ந்தது. அதன் அரசர்கள் அதில் பல அழ
கிய கட்டடங்களையும் கோயில்களையும் கட்டினர்.
அங்கு வியாபாரமும் அதிகமாய் நடந்தது. அக்
காலத்தில் அது உலகத்திலேயே சிறந்த ஒரு பட்

டணமாய் விளங்கிற்று. அங்கு பல வித்வான்கள் வாழ்ந்தனர். தெலுங்கு, கன்னடம், தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய பாஷைகள் எல்லாம் அபிவிருத்தியடைந்தன. ஜனங்கள் சந்தோஷமாய்க் காலம் கழித்தனர்.

கேள்விகள்

1. மைசூர் நாட்டில் சங்கராச்சாரியார் மடம் எங்குளது?
2. அங்கு 600 வருஷங்களுக்குமுன் பட்டம் வகித்த பெரியோன் யார்?
3. அக்காலத்தில்தென்இந்தியருக்குநேரிட்டபயம்என்ன?
4. புக்க, ஹரிஹரர்கள் யார்? அவர்கள் என்ன நோக்கத்துடன் வித்தியாரண்யரை வந்து பார்த்தனர்?
5. அவர்கள் ஏற்படுத்திய புதிய நாட்டின் தலைநகரம் எது?
6. அதை அவர்கள் எங்கு கட்டினர்? ஏன்?
7. அந்த ராஜ்யத்தால் தென்னிந்தியாவுக்கு ஏற்பட்ட நன்மை என்ன?
8. விஜயநகர ராஜ்யத்தின் எல்லைகளென்ன?
9. விஜயநகரத்தின் சிறப்பென்ன?

19. ராணு சாங்கா

பாபர் என்னும் வெற்றிவீரன் வட இந்தியாவைக் கைப்பற்றி ஆள ஆரம்பித்ததிலிருந்து இப்பொழுது நானூறு வருஷங்களுக்குமேல் ஆகிவிட்டது. அவன் முகலாயர் என்னும் வகுப்பைச் சார்ந்தவன். முகம்மதிய மதத்தினன். அவன் இந்தியாவுக்கு வடமேற்கிலுள்ள காபூல் நாட்டரசனுக விருந்தான். அப்பொழுது டில்லியில் அரசாண்ட சுல்த்தான் சைநிய பலமில்லாதவன். அவனுக்குட்பட்ட லாகூர் கவர்னர் கூட அச்சுல்த்தானை எதிர்க்க முடிந்தது. ஆகையால் பாபர் அவர்களை எதிர்த்த பொழுது அவர்களை யுத்தத்தில் வெல்வது அவனுக்கு ஒரு பிரமாதமான காரியமாயில்லை. அவனுடைய சைநியத்தில் நல்ல யுத்தப் பயிற்சியும் தேகவலிமையும் தைரியமுமுடைய போர்வீரர் இருந்தனர். மேலும் அவர்கள் பீரங்கிகளைச் சண்டையில் உபயோகித்தனர்.

பாபர்

அதன் பிறகு டில்லி சுல்த்தானைவிடப் பராக்கிரமமும் சேனுபலமும் யுத்தப் பழக்கமுமுள்ள ஒரு இந்திய வீரன் பாபர் மன்னனை எதிர்க்க வந்தான். அவன் பெயர் ராணு சாங்கா. யுத்தத்தில் சிங்கம் போன்றவன் என்று அப்பெயர்க்கு அர்த்தம். உண்மையும் அதுதான். தனது வாழ் நாளில் அவன் எண்பதுக்குமேலான யுத்தங்களில் கலந்து சண்டையிட்டவன். இச்சண்டைக்கு முன்னரே அவனுக்கு ஒரு கண்ணும் ஒரு கையும் போயிருந்தது. ஒரு காலும் நொண்டியாயிற்று. ஆயினும் எந்தச் சண்டையிலும் முன்னணியிலேயே நின்று சண்டை செய்யும் சூரன்.

அவன் ராஜபுத்திர அரசர்களுக்குள் ஒருவாறு தலைவன். இங்கு அநேக சிறிய அரசாட்சிகள் இருந்தன. அவற்றில் பெயர் பெற்றது சித்தூர். அதன் அரசர்களுக்கு ராணு என்னும் சிறப்புப் பெயர் உண்டு. ஏனைய அரசரெல்லாம் ராஜாக்கள். அவர்களுக்குள் ஒற்றுமை யென்பது குறைவு. ஆயினும் அவர்களில் பலர் அப்பொழுது ராணு சாங்கா வின் கொடியின் கீழ் சண்டை செய்ய வந்திருந்தனர். எல்லோரும் யுத்தப் பிரியர்கள் தாம். எல்லோரும் தைரியவான்கள் தாம். ஆனால் ஒற்றுமைக் குறைவு அவர்கள் பலத்தைக் குன்றச் செய்தது.

பாபரும் ராணுவைப் போன்றவனே. தனது பன்னிரண்டாவது பிராயமுதல் தனது நாட்டையும்

தனது அதிகாரத்தையும் காக்கப் பல யுத்தங்கள் செய்தவன். கோரமான ஆபத்துகளினிடையில் எதிரிகளை அஞ்சாது எதிர்த்துச் சண்டைகள் செய் தவன். மேலும் நல்லதேகபலமுடையவன். இந்தி யாவில் தனது சேனையுடன் எங்கு சென்றாலும் வழியில் குறுக்கிட்ட ஒவ்வொரு நதியையும் நீந்திக் கடப்பான். குதிரையேறி வெகு தூரம் சவாரி செய் யாத நாள் கிடையாது.

பாபரும் ராணா சாங்காவும் கன்வாஹா என்னு மிடத்தில் ஒருவரை ஒருவர் எதிர்த்து நின்றனர். சாங்காவின் சைநியம் பெரியது. பாபரின் சேனை சிறியது. அவ்வளவு பெயர் பெற்ற வீரனை எதிர்த் தால் தாம் தோற்றுப் போவோ மென்ற பயம் முகம்மதிய சேனைக்கு ஏற்பட்டது. அதை அறிந்த பாபர் அவர்களுக்குத் தைரியமுண்டுபண்ணி அவர் களை ஊக்கப்படுத்த ஒரு காரியம்செய்தான்.

தான் இந்துக்களுடன் போடும் அந்தச் சண்டை தனது மதத்தை ஸ்தாபிப்பதற்காகப் போடும் சண்டை யென்றான். தான் அது முதல் நல்ல முகம்மதியனாக இருக்கப் போவதாகச் சொன் னான். முகம்மதியர் பாவம் என்று கருதும் வழக் கங்களைத் தான் கைவிட்டதாகச் சொல்லித் தன்னிட மிருந்த சாராயத்தை யெல்லாம் கீழே கொட்டிவிட் டான். குடிப்பதற்குரிய கல்லிழைத்த தங்கப்பாத் திரங்களை யெல்லாம் உடைத்தெறிந்தான். நபிநாய

கத்துக்காக எல்லோரும் முயன்று சண்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

சண்டை நடந்தது. முகம்மதிய சேனை வீராவேசத்துடன் ஒற்றுமையாய் எதிர்த்தது. ராஜ புத்திர சேனைவீரர் ஒற்றுமை யில்லாததால் அவ்வளவு ஊக்கமாகச் சண்டை செய்யவில்லை. அவர்கள் தோல்வியடைவது நிச்சயமாயிற்று. ஆயினும் கணக்கற்ற வீரர் முன்வைத்த காலைப் பின் வைக்காமல் சத்துருவை எதிர்த்தே உயிர்விட்டனர்.

இவ்வெற்றி பெற்ற பிறகு பாபர் சக்கரவர்த்தி இந்துஸ்தானத்தை ஜயிப்பது வெகுசுலுவாயிற்று.

கேள்விகள்

1. பாபர் யார்? அவன் எவ்வாறு இந்தியாவை வெல்ல முடிந்தது?
2. பாபரை எதிர்த்த இந்திய வீரன் யார்? சண்டையில் சிங்கம் என்னும் பெயர் அவனுக்கு எப்படித் தகும்?
3. ராஜ புத்திர சைநியத்தின் பலம் ஏன் குன்றியிருந்தது?
4. பாபரைச் சிறந்த வீரனென்று எப்படிச் சொல்லலாம்?
5. எங்கு இவ்விருவருக்கும் யுத்தம் நேர்ந்தது?
6. தனது சேனையை ஊக்கப்படுத்தப் பாபர் என்ன செய்தான்?
7. யுத்தம் எவ்வாறு முடிந்தது? அதனால் ஏற்பட்ட பயன் என்ன?

20. ஆக்பரும் பைராம்கானும்

இந்தியாவை நன்ருய்ப் பரிபாலித்த அரச சிரேஷ்டரில் ஆக்பர் சக்கரவர்த்தி ஒருவராவர். அவருக்கு உயிர்களிடம் அன்பும் மனிதரிடம் கௌரவமும் உண்டு. பட்டத்துக்கு வரும் பொழுது அவருக்கு வயது பதினுன்கு. பிறந் தது முதல் அவர் கஷ்ட நிலைமையிலே யிருந்தார். அவர் தகப்பன் ஹுமாயூன் சக்கரவர்த்தி தனது நாடிழந்து அயல் தேசங்களில் வேற்றரசரின் உதவி தேடித்திரிந்தான். தனது தேசத்தை அவன் மறுபடி அடைந்து ஒரு வருஷத்துக்குள் இறந்தான்.

சிறிய பிள்ளையான ஆக்பருக்குப் பட்டம் கிடைத்தது. ஆயினும் அவருக்குச் சத்துருக்கள் பலர் இருந்தனர். அவர்களை அடக்குவதில் ஒத் தாசையா யிருந்தவன் பைராம்கான். அவன் ஹுமாயூன் சக்கரவர்த்தியின் தோழன். தனது நாட்டை இழந்து எங்கும் திரிந்த காலத்தில் அவ னைக் கைவிடாது நின்ற நண்பன். ஆகையால் ஆக்பர் சக்கரவர்த்தியானபொழுது பைராம்கா னுக்கே முதலில் அதிகாரம் கிடைத்தது. ஆக் பரைப் பாதுகாத்து அவருடைய சத்துருக்களை எதிர்ப்பதும் அவருடன் சேர்ந்து அந்நாட்டை ஆள்வதும் அவனுடைய காரியமாயிருந்தது.

ஆனல் பைராம்கான் முரடன், கோபக்காரன். அக்காலத்தில் ஆளுகை செய்பவருடைய அதிகாரத்துக்கு அளவே இல்லை. அரசாதிகாரம் செலுத்துபவர் எவரையும் விசாரணையின்றிக் கொல்லக்கூட முடியும். எந்தச் சொத்தையும் கொள்ளையிடலாம். ஆகவே பைராம்கான் தனக்கு வேண்டாதவர்களை இரக்கமின்றிக் கொல்லுவான். தனக்குக் கீழ்ப்பட்டவர்களை மிக்கத் துன்பப்படுத்தினன். அரண்மனையிலுள்ள ஆக்பரின் தாய் முதலியோர்கூட அவனிடம் அஞ்சவேண்டியதாயிற்று.

அம்மாதிரி நான்கு வருஷங்கள் கழிந்தன. ஆக்பருக்கு வயது பதினெட்டாயிற்று. அவரது தாய் முதலியோர் அவரை ராஜ்யபாரத்தைத் தாமே வகிக்கும்படி கெஞ்சிக் கேட்டார்கள். ஒருநாள் பைராம்கான் வேட்டையாடப் போயிருந்த காலத்தில் ஆக்பர் தமது ஜனங்களுக்கு ஒரு விளம்பரம் செய்தார். அன்று முதல் அவர் அரசாட்சி வேலையைத் தாமே நடத்துவதாக எல்லோருக்கும் தெரிவித்தார். தமது முத்திரையில்லாத எந்த உத்தரவும் செல்லாதென்று உத்தரவிட்டார்.

அப்பொழுதே பைராம்கானுக்கும் ஒரு கடிதம் எழுதுவித்தார். "இதுவரையில் நாம் படிப்பிலும் விளையாட்டிலும் காலம் கழித்தோம். அக்காலத்தில் ராஜ்ய கார்யங்களைத் தாங்கள் நடத்த வேண்டு

மென்று என் அபிப்பிராயம் இருந்தது. ஆனல் இன்று முதல் இந்த ராஜ்யத்தை ஆள்வது நமது சொந்தப் பொருப் பென்று தீர்மானித்து விட்டோம். தங்களுக்கு மெக்காவுக்குச் செல்லவேண்டு மென்னும் கோரிக்கை வெகு நாளாக உள்ளதல்லவா? அப்படியே சென்று அரசியல் விவகாரங்களை மறந்து வாழ்நாளை இனிமேல் கடவுளைத் தியானிப்பதிலேயே செலவழிக்கலாம்" என்று அதில் எழுதியிருந்தது.

இதைக்கண்ட பைராம்கான் மிக்கக் கோபம் கொண்டான். தனது சிநேகிதரைக்கொண்டு கலகம் செய்ய வென்று ஒரு சேனையைத் திரட்டினன். ஆனல் ஆக்பர் தாமே நேரில் அதை எதிர்த்துச் சென்று கலகத்தை அடக்கினர். பைராம்கான் பாடு திண்டாட்டமாய் விட்டது. தன்னை மன்னித்துக் காப்பாற்ற வேண்டுமென்று அவன் ஆக்பருக்கு வெகு வணக்கமாய் மனுச்செய்து கொண்டான்.

ஆக்பர் அவன் செய்த துரோகத்தை நினைக்கவில்லை. அவனை மரியாதையாய்த் தம்முன் வரும்படிசெய்து, முன் போலவே கௌரவமாய் நடத்தினர். பைராம்கான் உடனே சக்கரவர்த்தி காலில் விழுந்து தான் செய்த தவறுக்காகக் கண்ணீர் விட்டான். ஆக்பர் அவனை எழுப்பித் தமது பக்கத்தில் உட்காருவித்து, சபையோர் யாவரும் கேட்கக்கூடிய குரலில், பிரியமாய், "தாம் ஒருநாட்டு அதிபதியாகச்

செல்லப் பிரியமா? இச்சபையிலேயே என்னுடன் இருக்க இஷ்டமா? மெக்காவுக்குப் போக ஆசையுண்டா? அப்படிச் சென்றால் வருஷவாரி ஐம்பதாயிரம் ரூபாய் செலவுக்குத் தருகிறோம்" என்றார். பைராம்கான் மெக்காவுக்குப் போவதாகத் தீர்மானித்தான்.

ஆக்பர் தாமே அரசாட்சி காரியம் பார்த்து வந்தார். அவ்வரசாட்சியில் தவறுகள் வெகு குறைவு. எப்பொழுதும் தமது குடிகளை ஒன்றுபடுத்துவதில் கருத்துடையவரா யிருந்தார். இந்துக்களையும், முகம்மதியரையும் ஒற்றுமையாய் வாழும்படி செய்யப் பாடுபட்டார். பல சீர்திருத்தங்கள் செய்து தேசம் செழிக்க முயற்சி செய்தார்.

கேள்விகள்

1. ஆக்பரின் குணாதிசயம் என்ன?
2. அவரது இளமை எவ்வாறு கழிந்தது?
3. பைராம்கான் யார்? அவன் ஆக்பருடைய இளம் பருவத்தில் அரசப் பிரதிநிதியாய்வர எப்படிச் சாத்தியமாயிற்று?
4. பைராம்கான் எப்படிப்பட்டவன்? அவன் செய்கைகளால் நாட்டில் என்ன நிலைமை ஏற்பட்டது?
5. அதனால் ஆக்பர் என்ன செய்தார்? அவரது விளம்பரம் என்ன?
6. பைராம்கானுக்கு என்ன கடிதம் எழுதினார்?

7. பைராம் செய்த காரியமென்ன? அதன் முடிவென்ன?
8. தவறிழைத்த பைராம்கானை ஆக்பர் எவ்வாறு நடத்தினார்?
9. பைராம்கானின் முடிவு என்ன?
10. ஆக்பர் சக்கரவர்த்தியின் அரசாட்சிச் சிறப்பென்ன?

21. சன்ட் சுல்த்தானா

தக்ஷிணத்தில் சில நூற்றாண்டுகளுக்குமுன் பாமினி ராஜ்ய மென்று முகம்மதிய ராஜ்ய மொன்றிருந்தது. அது பிற்காலத்தில் சிதைந்து ஐந்து அரசுகளாகப் பிரிந்துவிட்டது. அவற்றில் பிஜப்பூர் தென்மேற்கிலுள்ள பெரியராஜ்யம். ஆமதுநகரம் வடக்கிலுள்ள சிறியநாடு. அங்கு மூன்று நூற்றாண்டுகளுக்குமுன் ஒரு அரசனுக்குச் சன்ட் பிபி என்றொரு பெண் பிறந்தாள். வெகு சாமர்த்திய முடையவள். அவளது தகப்பன் ஆண் பிள்ளைக்குப் போல் அவளுக்கு அரசாட்சி முறையைக் கற்றுத் தந்தான்.

பிறகு பிஜப்பூர் நாட்டுச் சுல்த்தான் அலி அடில்ஷா அவளைக் கலியாணம் செய்துகொண்டான். தனது ராணியின் புத்தி கூர்மையையும் அரசாளும் திறமையையும் கண்டு அவன் மகிழ்ந்தான். ராஜாங்க விஷயத்தில் அவள் சொல்லும் யோசனைகளைக் கேட்டு நடப்பான். ராஜாங்கத்தில்

அவளுக்குச் சலுகை அதிகமுண்டு. அரசசபையில் வீற்றிருந்து அவள் அதிகாரம் செய்வதுண்டு. யுத்தத்துக்குப் போகும்கால் சுல்த்தான் பக்கத்தில் ஒரு குதிரையில் அவளும் ஏறிச் செல்லுவாள். பிஜப்பூர் நாட்டாருக்குத் தமது ராணியினிடம் வெகு அன்பும் மரியாதையும் ஏற்பட்டது.

ஆனால் அவள் புருஷன் கொஞ்சநாளில் இறந்தான். சன்ட் சுல்த்தானுவுக்குக் குழந்தையில்லை. ஆகையால் அவள் தன் பிறந்த ஊரான ஆமதுநகரத்துக்கே திரும்பி வந்தாள்.

அப்பொழுது ஆமது நகரத்தை ஆண்டவன் சன்ட் பிபியின் சகோதரன். அவனுக்குப் பைத்தியம் பிடித்ததால் தகாத காரியங்களை அவன் செய்யத் தலைப்பட்டான். பொக்கிஷத்திலுள்ள இரத்தினங்களை அழித்தான். தனது குமாரன் தூங்கிய அறைக்கு ஒரு இரவில் நெருப்பு வைத்து விட்டான். அப்பிள்ளை தப்பியது பெருங்காரியமாயிற்று.

அப்பிள்ளையின் பெயர் மீரான் ஹுசேன். அவன் உடனே அரண்மனையை விட்டகன்று தனது நேசர்களைச் சேர்த்துக்கொண்டு தலைநகரைக் கைப்பற்றினான். தனது தகப்பனைக் கோரமாய்க் கொன்றான். பல தீமைகளைச் செய்தான். ஊரெல்லாம் அமளி. அச்சமயத்தில் சிறந்த முகலாயச் சக்கரவர்த்தியான ஆக்பர் அவ்வூரை

முற்றுகையிட்டார். அவ்வூர் ஜனங்கள் சன்ட் சுல்த்தானவே அவ்வாபத்தில் தலைமை வகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அவ்வம்மணி ஒப்புக்கொண்டு தனது பிறந்த நகரைக் காப்பாற்ற ஏற்பாடு செய்தனள்.

முகலாயத் துருப்புகள் பெரிய பீரங்கிகளைக் கொண்டு கோட்டைகளை இடித்துத் தள்ளினர். ஒருநாள் ஒரு பெரிய திறப்பின் வழியாய் முகலாய சைநியம் உள்ளே நுழைய வந்தது. ஆமது நகரத்தார் பயந்து பின்னிடைவார்போலிருந்தது. ஆனல் அப்பொழுது சன்ட் பிபி கவசம் தரித்து உருவிய வாளுடன் அங்கு வந்தாள். தப்பியோட நினைத்த துருப்புகள் உடனே எதிர்த்து நின்றனர். முகலாயரோ அடுக்கடுக்காகக் கோட்டைக்குள் நுழையப் பாடுபட்டனர். ஆனல் ஒன்றும் முடியவில்லை. கோட்டைக்குள்ளிருந்தவர்கள் வீரத்துடன் அவர்களைத் துரத்தியடித்தனர். அகழியில் பிணக்குவியல் பெரிதாயிற்று. ஒருபகல் முழுதும் சண்டை நடந்தது. முன்னணியில் எதிர்த்து நின்றவர்களில் சுல்த்தானவும் ஒருவர்.

பிறகு சன்ட் பிபி முகலாயருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டாள். ஆமதுநகரத்திலிருந்த அவளது விரோதிகள் உடனே கலகம் செய்தனர். 'சன்ட் பிபி நாட்டை முகலாயரிடம் ஒப்புவிக்கச் சதி செய்கிருள்' என்று கூறினர்.

அதை நம்பிச் சில வீரர் சுல்த்தாணுவிருந்த அறைக்குள் புகுந்து அவளைக் கொன்று போட்டனர். தனது பிறப்பிடத்துக்காகத் தன் உயிரை மாய்த்துக் கொண்ட வீரமாது அல்லவா சன்ட் சுல்த்தாணு!

கேள்விகள் :

1. தக்ஷிணத்தில் முன் இருந்த முகம்மதிய ராஜ்யம் எது?
2. அது சிதைந்தபொழுது ஏற்பட்ட சிறு ராஜ்யங்களில் இரண்டு சொல்லுக. அவை எங்கெங்கு உள்ளன?
3. சன்ட் சுல்த்தாணு பிறந்தவிடமெது? வாழ்க்கைப் பட்ட இடம் எது?
4. அப்பெண்மணியை அவளது (1) தகப்பன் (2) புருஷன் எவ்வாறு மேன்மையடையச் செய்தனர்?
5. அவள் ஏன் ஆமதுநகரத்துக்குமறுபடியும்வரநேர்ந்தது?
6. ஆமதுநகரில் அக்காலத்தில் அரசாட்சியில் என்ன விபரீதங்கள் நேர்ந்தன?
7. அப்பொழுது அந்நாட்டைப் படையெடுத்தது யார்?
8. அந்நகரைக் காப்பாற்ற முன்வந்தது யார்?
9. இடிந்தகோட்டைச் சுவரிலிருந்து சுல்த்தாணுசெய்த சாகசச் செயல்கள் எவை?
10. சன்ட் சுல்த்தாணுவை என்ன சதி செய்து கொன்றனர்?

22. சிவாஜியும் அப்சுல்கானும்

மகாராஷ்டிர மென்பது தக்ஷிணத்தின் வடபாகத்தில் அரபிக்கடலுக்கும் மத்திய இந்தியாவுக்கும் நடுவில் உள்ள மலைநாடு. அதில் உள்ள ஜனங்கள் மராத்தியர். நல்ல தேகக்கட்டும் பலமும் உடையவர்கள். பாடுபட்டுத் தாம் எடுத்துக்கொண்ட காரியத்தை நடத்தி முடிப்பவர்கள்.

முன்னூறு வருஷங்களுக்கு முன் அந்நாட்டில் சிவாஜி என்னும் புருஷ சிரேஷ்டன் தோன்றினான். சிறு வயது முதல் அவன் புத்தி கூர்மையும் கடவுளிடம் பக்தியுமுடையவனாய் விளங்கினான். அவனது ஆசிரியர் அவனுக்கு யுத்த முறைகளை நன்கு கற்பித்தார். அவனது குருமார் ராமதாஸ சுவாமி துக்காராம் பாவா என்னும் பாகவதப் பெரியார். அவர்கள் அவனுக்குப் பசுவையும் தர்மத்தையும் உண்மையையும் காக்கவேண்டுமெனப் போதித்தனர்.

அக் காலத்தில் இந்து தர்மம் நிலைகுலைந்து இருந்தது. இந்தியாவின் பெரும் பாகம் முகம்மதியர் கைவசமாயிருந்தது. இந்துக்களுக்குப் பல வழிகளிலும் தொந்தரவு அதிகம். சிவாஜி பிறந்த நாடுகூடப் பிஜப்பூர் சுல்த்தான் வசமாயிருந்தது. எனவே சிவாஜி அந்நாட்டில் முகம்மதிய அதிகாரத்தை ஒழித்து இந்து தர்மத்தை நிலைநாட்டு

வதையே தனது வாழ்வின் நோக்கமாகத் தீர்மானித்தான்.

அவன் இருந்தவிடம் புனா. அங்குள்ளவர்களில் பலரைத் தனது தோழர்களாகச் செய்துகொண்



சிவாஜி

டான். பத்தொன்பதாவது வயதில் ஒரு மலைக் கோட்டையைக் கைப்பற்றினன். பிறகு ராஜகர்

என்ருெரு கோட்டையைக் கட்டினன். பிறகு பல கோட்டைகளைப் பிடித்துச் சிறிது சிறிதாகத் தனது அதிகாரத்தைப் பெருக்கினன்.

அதுகேட்ட பிஜப்பூர் சுல்த்தான் கோபத்துடன் சிவாஜியைப் பிடித்துவர ஒரு பெரிய சைநியத்தை அனுப்பினன். அதன் தலைவன் அப்சுல்கான் என்னும் முகம்மதிய வீரன். பெருத்த சரீரத்தையுடையவன். நல்ல பலசாலி. யுத்த அனுபவமுள்ளவன். புறப்படும் போதே இந்து மதத்தை ஒழித்து சிவாஜியை எப்படியாவது உயிருடனே கொன்ருே பிடித்து வருவதாகச் சபதம் செய்து புறப்பட்டான். வழியிலுள்ள இந்து கோயில்களை இடித்தும் அசுத்தப்படுத்தியும் பசுக்களைக் கொன்றும் ஜனங்களை உபத்திரவித்தும் வந்தான்.

அப்பொழுது சிவாஜியிடம் போதுமான சைநியம் இல்லை. அப்சுல்கானுடன் யுத்தம் செய்வது முடியாதென்று தெரிந்தது. "நான் சிறுவன்; யுத்தப்பழக்கமில்லாதவன். அப்சுல்கான் போன்ற வீருடன் என்னல் சண்டையிடமுடியாது. ஆகையால் சமாதானமாய்ப் போவோம். என்னிடம் பிரியமுடன் கான் நடந்துகொண்டால் நான் பணிந்து நடப்பேன்" என்ருன்.

அப்சுல்கான் பார்த்தான். சண்டை செய்யாமலே தான் நினைத்த காரியத்தை முடிக்கச் சமயம்

வந்ததெனக் களிப்படைந்தான். சிவாஜி சொல்லை ஒப்புக்கொண்டான். பிரதாபகரக் கோட்டையின் அருகில் அவர்கள் சந்தித்தனர். ஒவ்வொரு கட்சியிலும் தலைவனைத் தவிர இருவர் மாத்திரம் கூட வந்திருந்தனர். எதிரி பிஜப்பூர் ராஜ சபையில் சொன்னபடி முடித்து விடுவானோ என்ற எண்ணம் சிவாஜியைச் சந்தேகிக்கச் செய்தது. அதனால் தன்னைக் காக்கத் தன் கைவிரலில் புலி நகம் என்னும் கூரிய எஃகு ஆயுதம் தரித்துச் சென்றான்.

இருவரும் சந்தித்தனர். அத்தேச ஆசாரத்தின்படி ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டனர். அப்பொழுது சிறியவனான சிவாஜியை அப்சல்கான் அழுத்திப் பிடித்துக்கொண்டு வாளை எடுக்கப் பார்த்தான். சிவாஜி தன் புலி நகத்தை அவனது வயிற்றில் பாய்ச்சினான். வலி பொறுக்காது அவன் பிடியை நெகிழவிட்டான். தனது பிச்சுவாவை எடுத்து சிவாஜி அப்சுல்கானைக் குத்திப்போட்டான். தமது தலைவரைக் காக்க வென்று அருகிலிருந்த சிவாஜியின் துருப்புகள் உடனே பிஜப்பூர் படைமேல் பாய்ந்து அவர்களைத் துரத்தி யடித்தனர். ஜயம் சிவாஜியினுடையதாயிற்று.

பிறகு சிலகாலம் சிவாஜிக்கும் பிஜப்பூர் சுல்த்தானுக்கும் சச்சரவு நடந்தது. கடைசியாய்ச் சுல்த்தான் மராத்திய வீரனுடன் உடன்படிக்கை செய்து கொண்டான். சிவாஜி பிடித்த நாடுகள் அவனிடம்

விடப்பட்டன. சிவாஜி மேன்மேலும் முகம்மதிய ரிடமிருந்து நாடுகளைப் பற்றி ஒரு மகாராஜா வாயினன். அவனது நாட்டில் இந்து தர்மத் தின்படி ராஜ்ய பாரம் நடந்துவந்தது.

கேள்விகள்

1. மகாராஷ்டிர நாடு எது? அந்நாட்டினர் எப்படிப் பட்டவர்?
2. சிவாஜியின் இளமைப்பருவத்தைப் பற்றிச் சொல்லுக.
3. சிவாஜி தனது வாழ்வின் நோக்கமாக எடுத்துக் கொண்ட காரியம் எது?
4. சிவாஜி தனது அதிகாரத்தை எவ்வாறு பெருக்கினன்?
5. சிவாஜியை எதிர்த்த பிஜப்பூர் வீரன் யார்?
6. அவன் வரும்வழியில் இயற்றிய கொடுமைகள் என்ன?
7. சிவாஜி அப்பொழுது என்ன சொல்லி யனுப்பினன்?
8. சிவாஜி கானைச் சந்திக்க என்ன ஏற்பாடுடன் சென் ருன்?
9. சிவாஜி ஏன் தனது புலி நகத்தை உபயோகித்தான்?
10. சிவாஜி பிற்காலத்தில் எவ்விதச் சிறப்பை அடைந் தான்?

23. ஒரு புதிய சமுத்திர மார்க்கம்

உலக படத்தைக் கவனித்துப் பாருங்கள். அதில் இந்தியா எங்கிருக்கிறது? ஐரோப்பா எங்கிருக்கிறது? ஐரோப்பா ஒரு கண்டம்; என்றால் பல தேசங்களடங்கிய பூமி பாகம். இந்தியா ஆசியாக்கண்டத்திலுள்ள ஒரு தேசம்தான். ஆயினும் பெரிய தேசம். இங்கு பிற நாடுகளில் கிடைக்காத பல பொருள்கள் கிடைக்கும். பலவித ரத்தினங்களும் மிளகு முதலிய வாசனைப் பொருள்களும் அவைகளில் முக்கியமானவை. இந்தியாவுக்குக் கிழக்கில் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றில் கிராம்பு ஜாதிக்காய் முதலிய வேறு பல வாசனைத் திரவியங்களும் கிடைக்கும். இவை ஐரோப்பாவிலுள்ள ஜனங்களுக்கு வேண்டியிருந்தன. அவற்றை அவர்கள் பிரியத்துடன் வாங்குவார்கள்.

ஆதலால் வியாபாரிகள் பலர் அவற்றை இந்தியாவில் வாங்கி ஐரோப்பாவுக்குக் கொண்டு போவார்கள். ஆனால் அவர்கள் செல்லும் மார்க்கம் வெகு தூரமானது. எந்த வழியாய்ச் சென்றாலும் அநேக ஆயிரம் மைல்கள் வழிப் பிரயாணம் செல்லவேண்டும். லாபம் கிடைக்கிறதே யென்று வியாபாரிகள் கஷ்டத்தைப் பாராமல் அச் சரக்குகளை வாங்கிச் செல்லுவார்.

மறுபடி படத்தைப் பாருங்கள். இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கரை மார்க்கமாகப் போக

லாம். கடல் மார்க்கமாகப் போகலாம். சிறிது கரையும் பெரும்பாகம் கடலுமாக ஒரு பாதை உண்டு.

அப்பாதையைக் கவனிப்போம். இந்தியாவின் மேற்குக் கடலில் ஒரு துறைமுகத்திலிருந்து ஒரு சிறு கப்பலில் வாசனைத்திரவியம், இன்னும் பல பொருள்கள் ஏற்றப்பட்டு இருக்கின்றன. அக் கப்பல் ஆப்பிரிக்காவின் வடக்கில் வசிக்கும் ஒரு முகம்மதிய வியாபாரிக்குச் சொந்தம். அவனுடன் இருந்து அக்கப்பலை நடத்துபவர்களும் மற்ற வேலைக்காரர்களும் முகம்மதியர்தான். அவர்களுக்கு 'மூர்' என்பது நாட்டுப் பெயர்.

கப்பல் அரபிக் கடலுக்குக் குறுக்கே செல்கின்றது. கார்த்திகை மாதம். அக்கடலில் வடகிழக்கிலிருந்து தென்மேற்குத் திக்கு நோக்கி ஒரு காற்று அடிக்கிறது. அதனால் அக்கப்பல் அதிகப் பிரயாசையின்றிச் செல்லமுடியும். ஏறக்குறைய ஒரு மாதகாலத்தில் அது செங்கடல் வந்து சேருகிறது. செங்கடல் வெகு நீண்ட ஜலபாகம். இங்கு நமது வியாபாரக் கப்பல் வெகு மெதுவாகச் செல்கின்றது. கடைசியாய் அக்கடலின் வட கரையை அடைகிறது. பிறகு சாமான் கரை வழியாய்ச் சிறிதுதூரம் செல்லவேண்டும். அது ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் ஒன்றுசேர்க்கும் ஒரு வெகு குறுகிய நிலம். பூசந்தி யென்பார்கள். அந்தக் கரையைத் தாண்டி மறுபடி மத்திய

தரைக்கடல் என்னும் கடலில் வேறு கப்பலில் ஏற்றப்பட்டு ஐரோப்பாவில் அக்கடலின் எதிர்க் கரையில் உள்ள சில பட்டணங்களுக்குக் கொண்டு போகப் படுகின்றது. அங்கிருந்து பல தேசங் களுக்கு அவற்றை வியாபாரத்துக்குக் கொண்டு போவார்கள்.

இந்த வியாபாரம் வெகு லாபந் தரக்கூடியது. ஆகையால் மேற்கு ஐரோப்பாவில் போர்த்துகல் நாட்டினர் வேறொரு வழி கண்டுபிடிக்க வெகு பாடுபட்டனர். அவர்களில் ‘டயஸ்’ என்னும் மாலுமி ஆப்பிரிக்காக் கண்டத்தின் மேற்குக்கரை யோரமாய்க் கப்பல் பிரயாணம் செய்து அதன் தெற்குக் கோடியை அடைந்தான். அப்பொழுது தான் கடல்மார்க்கமாய் இந்து சமுத்திரத்துக்கு வரலாமென்று ஐரோப்பியருக்குத் தெரிந்தது. ‘காமா’ என்னும் ஒரு தீரமுடைய போர்த்துகல் நாட்டுப் பிரபு மூன்று கப்பல்களுடன் வெகு மெது வாகக் கரையை ஒட்டி யாத்திரை செய்து கடல் மார்க்கமாகவே கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந் தான். அப்படி அவன் வந்து இப்பொழுது 440 வருஷமாகிறது.

வழி ஏற்பட்டதும் ஐரோப்பாவிலிருந்து இவ் வழியாய்க் கப்பல்கள் வியாபாரத்துக்கு வர ஆரம் பித்தன. போர்த்துகீஸியர் (போர்த்துகல் நாட் டார்) மூர்களுடன் சண்டை செய்து அவர்களுடைய

வியாபாரத்தைக் கெடுத்தார்கள். சிறிது காலம் கழித்து டச்சியர், ஆங்கிலர், ப்ரான்ஸியர் முதலிய வேறு ஐரோப்பியரும் அவ்வழியாய் வரலானார்கள். அவர்களில் ஆங்கிலர் இந்தியாவை ஜயித்து நம்மை ஆளுகிறார்கள். ஆனால் முதலில் வியாபாரிகளாகவே அவர்கள் இங்கு வந்தனர்.

கேள்விகள்

1. இந்தியாவில் கிடைக்கக்கூடிய அரிய பொருள்கள் எவை?
2. கிழக்கு இந்தியத் தீவுகளில் என்ன கிடைக்கும்?
3. முற்காலத்தில் அதைப் பிரியமாய் வாங்கிய அன்னியர் யார்?
4. இந்தியாவிலிருந்து ஐரோப்பா செல்லச் சாதகமான வழிகள் எவை?
5. இந்தியாவிலிருந்து சரக்கேற்றிச் செல்லும் ஒரு கப்பல் எவ்வழியாய்ச் செல்லும்? எங்கெல்லாம் போகும்?
6. இவ்வியாபாரத்தை முதலில் யார் செய்து வந்தனர்?
7. இவ்வியாபாரத்தின் சிறப்பென்ன?
8. அதைக் கவர எந்த ஐரோப்பிய நாட்டார் முதலில் பாடுபட்டார்?
9. புதிய சமுத்திர மார்க்கத்தைக் கண்ட இரண்டு போர்த்துகீஸியப் பெரியார் யார்?
10. அவர்களை முதலில் எதிர்த்தவர் யார்?
11. நாளடைவில் இவ்வியாபாரத்தில் கலந்துகொண்ட வேறு ஐரோப்பிய நாட்டினர் யார்?

24. போட்டி

இந்திய வியாபாரத்துக்காக ஐரோப்பியர் ஒரு சமுத்திர மார்க்கத்தைக் கண்டுபிடித்தா ரல்லவா? அவ்வழியாகப் பல தேசத்தினர் இத்தேசத்துக்கு வர ஆரம்பித்தனர். இருநூறு வருஷங்களுக்கு முன் இத்தேசத்தில் அவ்வியாபாரத்தில் மிக்க முனைந்திருந்தவர் ஆங்கிலரும் ப்ரான்ஸியருமாம். ஆங்கிலர் அல்லது இங்கிலீஷ்காரர் இங்கிலண்டு தேசத்திலிருந்து வந்தவர். ப்ரான்ஸியர் ப்ரான்ஸ் தேசத்திலிருந்து வந்தவர்.

இவர்கள் இந்தியாவில் கடற்கரையிலுள்ள சிற்சில துறைமுகங்களில் பெரிய கிடங்குகளை அமைத்து அங்கிருந்து இந்தியாவின் சரக்குகளை வாங்கித் தமது நாட்டுக்கு அனுப்புவார்கள். ஆங்கிலர் சோழ மண்டலக்கரையில் மதராஸ் கூடலூர் ஆகிய இரண்டிடங்களிலும் கிடங்கு கட்டி வைத்தனர். மதராஸில் தமது பாதுகாப்புக்காக ஒரு கோட்டையையும் கட்டினர். அதுதான் ஸெயின்ட்ஜார்ஜ் கோட்டை. ப்ரான்ஸியர் புதுச்சேரியில் ஒரு கோட்டைகட்டிக் கிடங்குகளை ஏற்படுத்திக்கொண்டனர்.



இவ்விரண்டு ஐரோப்பிய தேசத்தாருக்கும் வியாபாரத்தில் போட்டி ஏற்பட்டது. துவேஷமும் ஏற்பட்டது. அப்பொழுது இப்பட்டணங்கள் இருக்கும் தென்னாட்டில் அமைதி குறைவாகவிருந்தது. இங்குள்ள படத்தைப் பார்க்க. கர்நாடகம் என்னும் நாடு ஆற்காடு நவாபுக்குச் சொந்தமா யிருந்தது. அவனுக்கு மேலதிகாரி நிஜாம் என்னும் அரசன். அவனுடைய பிரதான நகரம் ஹைதரா



பாத்து. தக்ஷிணத்தின் கிழக்குப் பாகமெல்லாம் அவனுக்குச் சொந்தம்.

கிழவனுயிருந்த நிஜாம் இறந்தான். உடனே அவன் பிள்ளை யொருவனும் பேரன் ஒருவனும் பட்டத்துக்குச் சண்டையிட்டனர். அவ்விதமே கர்னடக ராஜ்யத்திலும் இருவர் அது தம்முடையதெனச் சண்டையிட்டனர். எனவே இந்நால்வரும் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தனர்.

அப்பொழுது ஆங்கிலரும் ப்ரான்ஸியரும் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தனர். அரசனுடைய தயவு இருந்தால் வியாபாரம் நன்கு செய்யலாமல்லவா ?

அக்கட்சி விபரம் பின் வருமாறு:

நிஜாம் ராஜ்யத்துக்கு	பிள்ளை நாஸிர்ஜங்	பேரன் முஸபர்ஜங்
கர்நாடகத்துக்கு	அன்வாருடீன்	சந்தாசாகிப்
உதவிய ஐரோப்பியர்	ஆங்கிலர்	ப்ரான்ஸியர்

நடந்த சண்டையில் முதலில் ப்ரான்ஸியர் சேர்ந்த கட்சி ஜயித்தது. அன்வாருடீன் யுத்தத்தில் மடிந்தான். அவன் மகன் முகம்மது அலி திருச்சிராப்பள்

கிளைவ் ட்யூப்ளே

ளிக்கு ஓடினான். அங்குள்ள கோட்டையில் அவன் தனது துருப்புகளுடன் இருக்க, ப்ரான்ஸியர் உதவியோடு சந்தாசாஹிப் அதை முற்றுகையிட்டான்.

அப்பொழுது புதுச்சேரியில் ப்ரான்ஸிய ருடைய தலைவனு யிருந்தவன் ட்யூப்ளே (துய்ப் ளெக்ஸ் என்பது பிரெஞ்சு பாஷையில் அதன் உச்சரிப்பு) அவன் தனது நாட்டினருக்குத் தென் இந்தியாவில் அதிகாரத்தை மிக அதிகமாக்கப்பாடு பட்டான்.

மதராஸில் ஒரு தலைவனும் ட்யூப்ளேயைப் போல் அவ்வளவு சாமர்த்தியமில்லை. ப்ரான்ஸியர் அதிகாரமே தலைப்பட்டு ஆங்கில வியாபாரம்போய் விடும் நிலைமை வரும்போ லிருந்தது. ஆனல் மத ராஸில் க்ளைவ் என்ருெரு ஆங்கில உத்தியோகஸ் தன் இருந்தான். அவன் பின் வருமாறு யோசனை சொன்னன்: "சந்தாசாகிபும் பிரான்ஸியரும் திருச் சிராப்பள்ளிக்குத் தங்கள் சைனியம் முழுவதையும் அழைத்துக்கொண்டு போய்விட்டனர். கர்னடகத் தலைநகராகிய ஆர்க்காட்டில் தகுந்த காப்பு இல்லை. ஒரு சிறிய சேனை அந்நகரைப் பிடிக்கலாம். அப் பொழுது சந்தாசாகிபு தன் பெரிய சேனையில் ஒரு பாகத்தை அனுப்ப வேண்டிவரும். திருச்சிராப் பள்ளி முற்றுகை பலமற்றுப்போம்."

அந்த யோசனை சிறந்ததாகத் தோன்றிற்று. க்ளைவின் தலைமையில் ஆங்கிலரும் இந்தியசிப்பாய் களும் சேர்ந்த ஒரு சைனியம் மதராஸிலிருந்து ஆற்காடு சென்றது. அக் கோட்டையைப் பிடித் தது. திருச்சியிலிருந்த சந்தாசாகிபைத் தனது

சேனையில் ஒரு பெரிய பாகத்தைப் பிரித்து ஆற் காட்டை நோக்கி அனுப்பும்படி செய்தது.

இதுதான் ஆரம்பம். கிளைவ் சிறந்த சேனைத் தலைவனென ஏற்பட்டது. வெற்றி சிறிது சிறி தாய் ஆங்கிலருடையதாயிற்று. ட்யூப்ளேயின் மனக் கோட்டை பலிக்கவில்லை. சந்தாசாகிபு அழிந்தான். ஆங்கிலருடைய நண்பன் முகம்மது அலி கர்னுடக நவாபு ஆனான். அதுமுதல் தென்னிந்தியாவில் போட்டியதிகமின்றி ஆங்கில வியாபாரம் நடந் தேறியது.

கேள்விகள்

1. இந்திய வியாபாரத்தில் போட்டி செய்த முக்கிய ஐரோப்பிய நாட்டினர் யார்?
2. அவர்கள் எப்படி வியாபாரம் செய்வார்கள்?
3. தென் இந்தியாவில் அவர்களுடைய கிடங்குகளும் கோட்டைகளும் எங்குள்ளன?
4. அவர்கள் வியாபாரம் வளர அவர்கள் என்ன செய்தார் கள்?
5. அப்பொழுது தென் இந்திய அரசருள் ஏற்பட்ட இருகட்சிகள் எவை?
6. ஆங்கிலரும் ப்ரான்ஸியரும் எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தனர்?
7. முதலில் யார் கட்சி ஜயம் பெற்றது? தோற்றுப் போன கட்சி என்ன வாயிற்று?
8. ப்ரான்ஸியர் கட்சி ஜெயம்பெறப் பாடுபட்டது யார்?

9. கிளைவ் யார்? அவர் சொல்லிய யோசனை என்ன?
10. கிளைவ் செய்த பெருங்காரியம் என்ன?
11. கடைசியாய் வெற்றி யாருக்குக் கிடைத்தது?

25. ராஜா ராம் மோஹனராய்

இந்தியாவிலுள்ள ஜனங்கள் பல மதத்தைச் சார்ந்தவர். அவர்களில் பெரும்பாலார் இந்துக்கள்; மூன்றிலொரு பகுதி முஸ்லீம்கள்; மேலும் கிறிஸ்தவர், பார்ஸிகள் ஆகிய பல பிரிவைச் சார்ந்தவர் இங்கிருக்கின்றனர்.

ஆனால் இந்துக்களே அவர்களில் வெகு அதிகமானவர். அவர்களில் பல பேதங்கள் உண்டு. உதாரணமாக, தென் இந்தியாவில் சைவர், வைஷ்ணவர் என வித்தியாச மிருக்கிறதல்லவா? மேலும் நமது நடுவில் பௌத்தர், ஜைனர் முதலியவர்களும் இருக்கிறார்கள்.

அம்மாதிரியே இத்தேசத்தின் வேறு பல பாகங்களிலும் பல மதத்தினரிடமும் பல வேற்றுமைகள் இருக்கின்றன. அதனால் ஏற்படும் சச்சரவுகளும் கலகங்களும் பலவாம்.

அதைக்கண்டு வருந்திய பெரியோர் சிலர் சண்டையின்றிச் சமரசமாக எல்லோரும் ஒத்திருக்கும் வழியைத் தேடினர். அவர்களில் ராம மோகனராய் ஒருவர்.

இவர் வங்காள நாட்டினர். நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இருந்தவர். அவர் நமது நாட்டில் வழங்கும் பல பாஷைகளைக் கற்ருர். பல மதங்களின் உண்மையைக் கண்டறியப் பாடுபட்டார்.

இவர் இந்து மதத்தில் பிறந்தவர். முதலில் அதனுடைய தத்துவங்களைத் தெரிந்து கொண்டார். பிறகு முகம்மதிய மதத்தின் உண்மைகளைக் குரானைப் படித்து அறிந்தார். கிறிஸ்தவமதம் சர்க்கார் மதமல்லவா? அதையும் அறியப் பாடுபட்டார். அதற்காக இங்கிலீஷ் மாத்திரமல்ல, அம்மத நூல்கள் முதலில் எழுதப்பட்ட க்ரீக், லத்தின் ஹிப்ரு முதலிய பாஷைகளைப் படித்து ஏசுநாதர் கற்பித்த உண்மைகளை அறிந்தார்.

ஒவ்வொரு மதத்திலுமிருந்து தமக்குச் சரியெனத் தோன்றிய முக்கிய விஷயங்களைச் சேர்த்து ஒரு புதிய மதம் ஒன்றை ஜனங்களுக்குப் போதித்தார்.

அவர் விக்கிரக ஆராதனை கூடாதென்ருர். ஜாதி வித்தியாசம் உதவாதென்ருர். இந்திய மத போதகர் மாத்திரமல்ல, இயேசு நாதர், முகம்மது நபிநாயகம் முதலிய உலக மதாசாரியர்களும் உண்மையைப் போதித்தனர் என்ருர். அவர்களுடைய போதனைகளை மரியாதையுடன் எல்லோரும் அறியவேண்டுமென்ருர்.

அவருடைய மதம் ஆரிய சமாஜமெனப் பெயர் பெற்றது. ஞானத்திலும், நன்னடக்கையிலும் பெயர் பெற்ற பலர் அவருடைய சிஷ்ரானுர்கள். இப்பொழுது வங்காளத்தில் பெயர் பெற்ற கவியும் ஆசிரியருமான ரவீந்திர நாத் தாகூரின் தகப்பனுர் அச்சிஷரில் ஒருவர்.

ராம் மோகன ராய் புது மத மேற்படுத்தியதுடன் நிற்கவில்லை. இந்து சமூகத்தில் வெகு நாளாய் இருந்து வந்த சில வழக்கங்களை மாற்றவும் பாடுபட்டார். அவற்றில் முக்கியமானது உடன் கட்டையேறலாகும். புருஷன் இறந்தால் மனைவி (சதி) உயிருடனே அவனைக் கொளுத்தும் சிதையில் படுத்துத் தானும் சாவது மிகப் பெரிய தர்மமென இந்து மதாசாரியர் கற்பித்து வந்தனர். அது சரியல்லவென்றும் கொலைபாதக மென்றும் ராய் போராடினர். ஆங்கில சர்க்கார் அவர் சொல்வது சரியெனஒப்புக்கொண்டு, உடன்கட்டையேறலைத் தடுத்துவிட்டனர்.

மேலும் விதவைகள் மறுவிவாகம் செய்து கொள்ளலா மென்றும், ஒரு ஆண் மகன் ஒரு சமயத்தில் ஒரே மனைவியுடையவனு யிருக்க வேண்டுமென்றும் போதித்தார்.

ராய் சர்க்கார் உத்தியோகம் பார்த்தவர். அவருடைய சிறந்த தொண்டுக்காக அவருக்கு 'ராஜா' என்னும் கௌரவப் பட்டம் கிடைத்தது. அவர்

இங்கிலன்துக்கு இரண்டு தடவை சென்று பல விஷயங்களைத் தெரிந்துகொண்டதுடன் நமது நாட்டைப்பற்றி அங்குள்ளவருக்குப் போதித்தார். கடைசியாய் அவர் அந்நாட்டிலேயே இறந்தார். ராம்மோகன் ராய் ஒரு பிரபல இந்தியச் சீர்திருத் தக்காரராம்.

கேள்விகள்

1. நமது தேசத்திலுள்ள பல மதத்தினர் யார்?
2. தென் இந்தியாவில் இந்துக்களுக்குள் உள்ள முக்கிய மதபேதம் என்ன?
3. இப்படி மதவித்தியாச மேற்பட்டதனுல் விளைந்த கெடுதி என்ன?
4. அக்கெடுதியை விலக்கப் பெரியோர் என்ன செய்தனர்?
5. ராம் மோகனராய் மதச் சீர்திருத்தம் செய்யுமுன் எப்படி உண்மையறியப் பாடுபட்டார்?
6. அவர் போதனைகள் என்ன?
7. அவர் போதித்த மதம் எது? அவரது சிறந்த சிஷர் ஒருவரைச் சொல்லுக.
8. ராய் பாடுபட்ட முக்கியச் சமூக சீர்த்திருத்தங்களைச் சொல்லுக. எதில் உடனே வெற்றி பெற்றுர்?
9. உடன்கட்டை யேறல் மகாபாதகமென எப்படிச் சொல்லுவாய்?
10. ராம் மோகனராயின் தொண்டினை எவ்வாறு அதிகாரிகள் போற்றினர்?

26. திப்பு சுல்த்தானும் சங்கராச்சாரியரும்

தென்னிந்தியாவின் கிழக்குப்பாகமாகிய கர்நாடக ராஜ்யம் நவாப் முகம்மதலிக்கு வந்த பிறகு, அந்நாட்டில் ஆங்கிலரே பலவிதத்திலும் அதிகாரமுடையவரானார். முகம்மதலி அவர்களைக் கேளாது ஒரு காரியமும் செய்யலாகாது.



அதுபோலவே தென்னிந்தியா முழுவதையும் தமது அதிகாரத்துக்குக் கொண்டுவர அவர்களுக்கு ஆசையுண்டு. முகம்மதலி நவாபாகிப் பத்து வருஷத்துக்கெல்லாம் அந்நாட்டின் மேற்குப் பாகத்தில் உள்ள மைசூரை ஹைதர்அலி என்னும் ஒரு முகம்மதியத் தலைவன் இந்து ராஜாக்களிட மிருந்து கைப்பற்றி ஆண்டு வந்தான். ஆங்கிலருடன் ஹைதரும் அவன் மகன் திப்பு சுல்த்தானும் நாலு யுத்தம் செய்தனர். கடைசியாய் வெற்றி ஆங்கிலருக்கே கிடைத்தது.

திப்புசுல்த்தான் முகம்மதிய மதத்தினன். தனது நாட்டுக்கு அருகிலுள்ள மலையாளம் குடகு திருவிதாங்கூர் நாடுகளைக் கைப்பற்ற முயன்றான்.

அவற்றில் திருவிதாங்கூர் அரசன் ஆங்கிலருடைய நண்பன். அவனை எதிரிகள் எதிர்த்தால் தாங்கள் ஒத்தாசைக்கு வருவதாக அவர்கள் அவ்வரச னுடன் உடன்படிக்கை செய்திருந்தனர்.

மேலும் திப்புசுல்த்தானைக் கண்டால் ஆங்கில ருக்குப் பிடிக்காது. எப்படியாவது அவனை அடக்கி அவனது ராஜ்யத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டு



ஹைதர் அலி திப்பு சுல்த்தான்

மென்பது அவர்கள் எண்ணம். அப்பொழுது சமயம் நேர்ந்தது. அக்காலத்தில் இந்தியாவில் ஆங்கிலருக்குத் தலைவனான கார்ன்வாலிஸ் பிரபு, "அந்தப் பைத்தியக்காரக் காட்டு மிராண்டி திப்பு

சுல்த்தான் யாதொரு காரணமுமின்றி நமது நண்பனை திருவிதாங்கூர் ராஜனை எதிர்த்தான். அவ்வரசனுடைய நாட்டை நாம் காப்பாற்ற வேண்டியது அவசியம்'' என்று எழுதினான். சைனியம் தயாராயிற்று. திப்புவின் வேறு விரோதிகளைச் சேர்த்துக்கொண்டு மைசூரின் தலைநகரைக் கைப்பற்ற காரன்வாலிஸ் சென்றபோது, அந்தச் சுல்த்தான் தனது நாட்டில் பாதியையும் ஏராளமான பொருளையும் தருவதாகச் சொல்லி உடன்படிக்கை செய்துகொண்டான்.

திப்பு பழையகால முகம்மதிய அரசர்களைப் போல் மதவைராக்கிய முடையவன் என்றும், மலையாளம் குடகு முதலிய நாடுகளில் ஜனங்களைத் தனது மதத்தில் சேரும்படி துன்பப் படுத்தினன் என்றும் சொல்லுவர். ஆயினும் தனது தேசத்து ஜனங்களை இந்து முஸ்லீம் என்னும் வித்தியாசம் அதிகமின்றிப் பாராட்டிவந்தான் என்பது திண்ணம். பெயர் பெற்ற சங்கராச்சாரியர் என்ற இந்து மதாசாரியாருடைய மடம் மைசூர் சமஸ்தானத்தில் சிருங்கேரி என்னுமிடத்தில் இருக்கிறது. அதில் இந்து சந்நியாசிகள் தலைமை வகிப்பார்கள்.

அக்காலத்தில் தலைவராய் இருந்த சங்கராச்சாரியாரிடம் திப்பு சுல்த்தானுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம். அடிக்கடி அவ்வாசாரியருடைய க்ஷேமத்தை விசாரித்து சுல்த்தான் அவருக்குக் கடி

தங்கள் எழுதுவதுண்டு. ஒரு சமயத்தில் மொராரிராவ் என்ற ஒரு மராத்திய சேனுதிபதி மைசூரில் புகுந்து கொள்ளையடித்தான். அவன் சிருங்கேரியைச் சும்மா விடவில்லை. மடத்தில் புகுந்து சங்கராச்சாரியர் பூஜை செய்யும் விக்கிரகம், பூசைப் பாத்திரங்கள், வேறு சொத்துக்கள் முதலிய எல்லாவற்றையும் கொள்ளை யடித்துச் சென்ருன்.

இந்த சமாசாரம் திப்புவுக்கு எட்டியது. அந்தச் சுல்த்தான் ஆசாரியருக்கு ஒரு கடிதம் எழுதினுன். இந்துக்களான மராத்தியர் செய்த காரியத்தைப் பற்றி வருந்தினுன். உடனே பூசைக்கு வேண்டிய பொருள்களை அனுப்பி உதவினுன்.

சங்கராச்சாரியரும் சுல்த்தானிடம் ராஜபக்தியும் அன்பும் உடையவராயிருந்தார். அரசன் எக்காரியம் செய்தாலும் அவருக்குத் தெரிவிப்பான். அக்காரியம் நிறைவேறுமாறு அவர் தாம் வழிபடும் கடவுளை வேண்டிக்கொள்வார்.

உண்மையான முகம்மதியரும் உண்மையான இந்துவும் நமது நாட்டில் திப்புசுல்த்தான் சங்கராச்சாரியரைப்போல் ஒத்து இருப்பது மேலல்லவா ?

கேள்விகள்

1. கர்நாடகத்தில் ஆங்கிலேயருக்கு எவ்வித அதிகாரம் கிடைத்தது ?
2. கர்நாடகத்துக்கு மேற்கிலுள்ள ராஜ்யம் எது ? அதை ஆண்ட முகம்மதிய அரசர் யார் ?

3. ஆங்கிலர் என்ன காரணத்தைக் கொண்டு திப்புவுடன் சண்டை செய்தனர்?
4. கார்ன்வாலிஸ் பிரபு திப்புவை எதற்காக எதிர்ப்பதாகச் சொன்னார்?
5. சண்டையின் முடிவென்ன? அப்பொழுது செய்து கொண்ட உடன்படிக்கையால் திப்புவுக்கு நேர்ந்த நஷ்டமென்ன?
6. திப்புவினிடம் என்ன குறை சொல்வது வழக்கம்?
7. திப்பு தனது நாட்டில் இந்து முஸ்லீம் வித்தியாசத்தைப் பாராட்டுவதுண்டா?
8. திப்புவின் நண்பரான இந்து மதாசாரியர் யார்?
9. அவருக்கு ஒருசமயம் நேர்ந்த கஷ்டமென்ன?
10. திப்பு அப்பொழுது அவருக்குச் செய்த உதவியாது?
11. இந்து முகம்மதிய ஒற்றுமைக்கு அவ்விருவரும் ஏன் நல்ல உதாரணங்களாவார்?

27. சாம்ராஜ்யம்

இவ்வுலகப் படத்தைப் பாருங்கள். அதில் கோடிட்டு மங்கலாய் இருப்பது எல்லாம் ஆங்கில சாம்ராஜ்யம். சாம்ராஜ்ய மென்றால் ஒரு சக்கரவர்த்திக்கு உட்பட்ட நாடுகளாம். இந்த ஆங்கில சாம்ராஜ்யம் மிகப் பெரியதல்லவா? உலகில் எங்கும் பரவிக் கிடக்கிறது. உலகின் தரைப் பாகத்தில் பெரிய பெரிய தேசங்கள் அதில் இருக்கின்றன. கடலில்

பல பெரிய தீவுகளும், பல சிறிய தீவுகளும் அவர்களுக்குச் சொந்தமானவைகளாய் இருக்கின்றன.

அவற்றுள் முக்கியமானவைகளின் பெயர்களை அறிவோம். வட அமெரிக்காவில் கனடா; ஆப்பிரிக்காவில் முக்கியமாய்த் தென் ஆப்பிரிக்கா; அதிலிருந்து வடக்குக் கோடிவரையில் பற்பல தேசங்கள்: ஆசியாவில் இந்தியா; ஆஸ்திரேலியா என்னும் தீவுக்கண்டம்; இவற்றுக்கெல்லாம் தலைமையாய் இருப்பது பிரிட்டன் என்னும் சிறு தீவு. அவற்றுக்கெல்லாம் அரசர் லண்டன்மா நகரில் வசிக்கிறார்.

இத்தேசங்களில் பல அவ்வரசருக்குட்பட்டுத் தமது விவகாரங்களைத் தாமே பார்த்துக் கொள்கின்றன. உதாரணமாக: கனடா நாட்டில் அரசனுக்குப் பதிலாக ஒரு ஆங்கிலப் பிரபு தலைவராயிருக்கிறார். மற்ற ராஜ்யகாரியங்களெல்லாம் கனடாக்காரரே பார்த்துக்கொள்கிறார்கள். வேறு பலதேசங்களில் ஆங்கிலேயர் தாமே ஆட்சி புரிந்துவருகிறார்கள்.

அம்மாதிரி ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வரும் நாடுகளில் மிகப் பெரியது நம் இந்தியா தேசம். ஆனாலும் இங்கும் தேசகாரியங்களை இந்தியரே ஒருவாறு பார்த்துக்கொள்ள அவர்களுக்கு, உரிமை கொடுத்திருக்கிறார்கள்.

உலகத்தில் இவ்வளவு பெரிய ராஜ்யம் ஒருவருடைய ஆட்சியில் இருப்பதில் மிக்கப் பல


ஆர்க்டிக் மஹாசமுத்திரம்
ஆசியா
பிரிடன்
ஐரோப்பா
இந்தியா
ஆப்பிரிக்கா
இந்து மஹா சமுத்திரம்
ஆஸ்திரேலியா
பசிபிக் மஹாசமுத்திரம்
கனடா
வட அமெரிக்கா
தென்அமெரிக்கா
அட்லான்டிக் மஹா சமுத்திரம்
பசிபிக் மஹா சமுத்திரம்

ஆங்கில சாம்ராஜ்யம்

னுண்டு. சாம்ராஜ்யத்துக்குச் சத்துருக்களாய் இருப்பவர்கள் அதை எதிர்க்கப் பயப்படுவார்கள். ஏனென்றால் இவ்வளவு விஸ்தாரமான நாடுகளிலிருந்து கணக்கற்ற போர்வீரர் ஒன்று சேர்ந்து அவர்களை தோல்வியடையச் செய்வார்களன்றோ ?

அப்படியே இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் ஒரு சம்பவம் நடந்தது. அப்பொழுது ஐரோப்பாவில் ஒரு மஹா யுத்தம் ஆரம்பித்து ஐந்து வருஷகாலம் நடைபெற்றது. அந்த யுத்தத்தில் லக்ஷக்கணக்கான போர்வீரர் இரண்டு கட்சியிலும் நின்று யுத்தம் செய்தனர். அவர்கள் உபயோகித்த பீரங்கிகள் கணக்கற்றவை. அந்தச் சண்டையில் இருபது லக்ஷம் பெயர் மாண்டனர் என்றால் அது எவ்வளவு பெரிய யுத்தம் என்று நீங்களே அறிந்துகொள்ளலாம்.

அந்த யுத்தத்தில் ஆங்கிலேயரும் கலந்துகொண்டனர். அப்பொழுது அவர்களுக்கு உதவியாகச் சாம்ராஜ்யத்தின் பல நாடுகளினின்றும், போர்வீரர்கள் வந்தனர். மேலும் யுத்தத்துக்கு வேண்டிய பல பொருள்களையும் அனுப்பித் தந்தனர். பணமும் கோடிக்கணக்கில் கொடுத்து உதவினர். யுத்தத்தில் வெற்றி பெற அவையெல்லாம் மிக்க உபயோகமாக இருந்தன.

அதுபோலவே சாம்ராஜ்யத்தின் எந்த பாகத்தையும் சத்துருக்கள் இனிமேலும் எதிர்த்தால்

சாம்ராஜ்ய நாடுகள் எல்லாம் ஒன்ருக நின்று சண்டை போடுமல்லவா? தற்சமயம் உலகத்தில் பெரிய கலவரம் நடக்குமோ என்கிற பயம் பல இடங்களில் இருந்து வருகிறது. அப்படி நடந்தால் ஆங்கில சாம்ராஜ்யம் தைரியமாய்த் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ஏனெனில் அதில் உள்ள எல்லா நாடுகளும் ஒற்றுமையாய் இருக்கின்றன. இந்தியாவும் அவற்றுள் ஒன்ருக இருந்து, ஆபத்து வந்த காலத்தில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சாத்தியமாகு மல்லவா?

கேள்விகள்

1. ஆங்கில சாம்ராஜ்யத்திலுள்ள பெரிய தேசங்கள் எவை?
2. அவற்றுள் தலைமை வகிப்பது எது? ஏன்?
3. இத்தேசங்கள் பலவற்றின் விவகாரங்களை யார் கவனிக்கிருர்கள்?
4. ஆங்கிலர் அரசாளும் நாடுகளில் பெரியது எது?
5. இந்நாடுகளெல்லாம் ஒரு சாம்ராஜ்யமா யிருப்பதனுல் என்ன பயன்?
6. ஐரோப்பிய மகாயுத்தம் எப்பொழுது நடந்தது? எவ்வளவு காலம் நடைபெற்றது?
7. மகா யுத்தம் என்று அதை ஏன் சொல்லலாம்?
8. அந்த யுத்தத்தில் ஆங்கிலர் கட்சி வெற்றி பெற எதனுல் சாத்தியமாயிற்று?
9. இதனுல் நாம் என்ன அறிந்துகொள்ளலாம்?

Printed at the 'Caxton Press,' Madras — 1940.

Caxton
Press,
Madras.